Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்


# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 30 • 14.02.2016

வடக்கின் கட்டடக்கலையில்
பாரிய புரட்சியை ஏற்படுத்தி கொண்டிருக்கும்
HARI
ENGINEERS & CONTRACTORS
CONTACT US
+94 77 2830694



## இரட்டை அணுகுமுறை பலன்கொடுக்கும்

– சுரேன் சுரேந்திரன்

தற்போது அதிகமும் ஊடகங்களில் உலகத்தமிழர் பேரவை பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆட்சிமாற்றத்தின் பங்காளி, இலங்கை அரசங்கத்தால் தடைப்பட்டியலிலிருந்து நீக்கம், தமிழ்தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தீர்வுதிட்ட தயாரிப்பில் பங்களிப்பு என தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துக் கொண்டிருக்கும் உலகத்தமிழர்பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனுடனான நேர்காணல் இது.

தொடர்ச்சி 10-ம் பக்கம்

## உள்ளே...



சுஷ்மா சூறாவளி
5



"படிக்கட்டு மலை"யின் புதையல் இரகசியம
16



சுழன்றடிக்கும் தமிழ் புயல்
20

# தேவை ஒரு மாற்றம்

அண்மையில் பல சமூக வலைத்தளங்களில் பரபரப்பாக பகிரப்பட்ட விடயம், ஐரோப்பிய நாடொன்றில் நடந்த பூப்புனித நீராட்டுவிழா காட்சிகள். ஒரு செல்வந்த தமிழர் தனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவை 'சீரும் சிறப்புமாக' நடத்தி முடித்துள்ளார். உலங்கு வானூர்தியில் பூப்படைந்த சிறுமியை ஏற்றிச் சென்று மண்டபத்தில் இறக்கியிருந்தார்.

இந்த காட்சி சமூக ஊடகப் போராளிகளை கொதிப்படைய வைத்துவிட்டது. சாதாரணமாக தோசை சுட்டாலும், துப்பாக்கியால்த்தான் சுடுவோம் என அடம்பிடிக்கும் போராளிகளாயிற்றே நமது தமிழ் பேஸ்புக் போராளிகள். தாறுமாறாக பொங்கியெழுந்து விட்டார்கள் அவர்கள். பேஸ்புக்கில் அந்த காட்சிகளை தமது கற்பனைக்கெட்டிய விதத்தில் புகைப்படத்தில் ஒட்டல், பொருத்தல் வேலைகளை செய்தும் பகிர்ந்தார்கள். அதில் இரண்டு படங்கள் இருந்தன. ஒன்று அந்த செல்வந்த சிறுமி. மற்றது யுத்தப்பாதிப்பிற்குள்ளான ஒருவர். இதன் மூலம் அதிகபட்ச அனுதாபத்தை தேடலாமென சமூகவலைத்தளவாசிகள் நினைத்திருக்கலாம்.

எல்லாம் வழக்கம் போல முடிந்தது. இரண்டுநாளின் பின்னர் அதை மறந்துவிட்டு, அடுத்த விடயத்தை கையிலெடுத்து போராட போய்விட்டார்கள் அவர்கள். சிறுமியை கண்டதுண்டமாக்கிவிட்டு அவர்கள் சென்றாலும், அவர்கள் கையிலெடுத்திருக்க வேண்டிய விடயம் அவர்களால் சகித்துக் கொள்ளப்பட்டு அப்படியேதான் உள்ளது. அதுபற்றியதே நமது அவதானம்.

பூப்புனித நீராட்டுவிழா போன்ற சடங்குகளின் அறிவுபூர்வதன்மை, கலாசார முக்கியத்துவம் பற்றியெல்லாம் நிறைய கேள்விகள் எழுப்பலாம். இப்படியான நிகழ்வுகளை தொடரலாமா என்பது பற்றிய பகிரங்க, அறிவார்ந்த உரையாடல்கள் அவசியம்.

தமிழர்கள் இந்த சடங்கை கைவிடும் அறிகுறிகள் தென்படவில்லை. மாறாக அது புதிய வடிவங்களை எடுக்கிறது. அனேக பெற்றோர் தமது பணபலத்தை காண்பிக்கும் முக்கிய நிகழ்வாக இதனை செய்கிறார்கள். குறிப்பாக புலம்பெயர்ந்த தேசங்களில் பூப்புனித நீராட்டு விழா, பரதநாட்டியம், என்பன ஒரு சடங்காக உருவாகிக் கொண்டிருக்கின்றன. புலம்பெயர் தேசங்களில் பிறந்த இந்த தலைமுறை பிள்ளைகளின் தமிழ் அடையாளங்களாக இவை இரண்டும்தான் எஞ்சி நிற்கின்றன. தமிழே பேச முடியாத, ஒருமுறைகூட தனது பெற்றவர்களின் நாட்டிற்கு வராத எண்ணற்ற ஐரோப்பிய தமிழ் யுவதிகள் பூப்புனித நீராட்டுவிழாவை கொண்டாடியுள்ளனர். பரதநாட்டிய அரங்கேற்றத்தை செய்துள்ளனர்.

இதில் பூப்புனிதநீராட்டுவிழாதான் ஒருவித அச்சமூட்டும் விஸ்பரூபம் எடுக்கிறது. ஆங்கிலம் பேசும், ஐரோப்பிய வாழ்வு வாழும் தமது பிள்ளைகளிற்கு பெற்றொர் கொடுக்கும் ஒரே கலாசார முதுசமாக பூப்புனிதநீராட்டு விழாக்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அது ஒன்றுதான் அந்த பிள்ளையின் வாழ்வில் நடக்கும் ஒரே தமிழ் அடையாளம். இதனை பெரும் பணச்செலவில் பெற்றோர் நடத்துகிறார்கள்.

ஐரோப்பிய தமிழர்களின் நடைமுறை, வாழ்வியல்முறைகள் எல்லாம் சில மாதங்களிலேயே தாயகத்திற்கு ஏற்றுமதியாகிவிடுகிறது. இதன்விளைவை இன்றைய இளம் தலைமுறையிடம் நேரடியாக காண்கிறோம். இயல்பான சமூக வாழ்வையே பலவிதங்களில் புரட்டிப் போட்டுவிட்ட கண்ணிற்கு புலப்படாத ஆபத்திது.

இந்த 'மெகா பூப்புனித நீராட்டு விழா'க்கள் விரைவில் இங்கும் இறக்குமதியாகலாம். இறுதி யுத்தத்தில் வன்னிக்குள் பல்லாயிரம் சனங்கள் கொத்துகொத்தாக இறந்து கொண்டிருந்தபோது நல்லூரில் திருவிழா கொண்டாடிய 'பொறுப்பான' சமூகம் நமது. இப்படியா னவர்கள் மத்தியில் மெகா பூப்புனிதநீராட்டுவிழா அறிமுகமானால் சொல்ல வேண்டியதில்லை.

புலப்பெயர்வு நம்மத்தியில் உருவாக்கிய பெரிய பிறழ்வே போலி வாழ்க்கைதான். வடக்கில் கணிசமான குடும்பங்களை சேர்ந்தவர்கள் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் வாழ்வு, நடை உடைக்கு ஈடுகொடுத்து வாழ எஞ்சிய குடும்பங்கள் படும் சிரமம் சொல்லி மாளாதது. இப்படியான சூழலில் படோபட பூப்புனித நீராட்டுவிழா கலாசாரம் நமக்குள் ஆழமாக ஊடுருவுவது நல்லதல்ல. பூப்புனித நீராட்டு விழாவின் அபத்தங்களை புரிய வைப்பது கல்வியமைப்புக்களினதும், சமூக நிறுவனங்களனதும் கடமை.

இப்படியான பின்னணியில், அந்த சிறுமியின் படங்களுடன் பேஸ்புக்கில் படங்களை பகிர்வது அபத்தமானது. அந்த சிறுமி ஏதுமறியாதவர். அந்த சிறுமியின் பெற்றோர் இந்த அபத்த கலாசாரத்தை கடைப்பிடிக்கும் சமூகத்தின் அங்கத்தவர்கள். அவர்கள் மட்டுமல்ல, நாமெல்லோருமே. அபத்த காலாசரத்தின் அங்கத்த வர்களாக நாம் எல்லோருமே இருந்து கொண்டு, ஒரு சிறுமியை, ஒரு குடும்பத்தை மட்டும் பலிபீடத்தில் ஏற்றுவது அநீதி.

நாம் மாற்ற வேண்டியது ஒரு கலாசாரத்தையே. அதை பின்பற்றும் ஒரு குடும்பத்தையல்ல.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



**டக்ளஸ் தேவானந்தா – ஈ.பி.டி.பி**

உள்ளூராட்சி தேர்தலில் மட்டுமல்ல, பாராளுமன்றம், மாகாணசபை தேர்தல்களிலும் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய அரசியலமைப்பு திருத்த சட்டத்திலும் இந்த விடயம் உள்ளடக்கப்பட வேண்டும்.




**சத்துரிகா சிறிசேனா – மைத்திரிபாலவின் புதல்வி**

எனது அப்பாவின் பதவி நிரந்தமானதல்ல. பதவியிலிருக்கும் காலத்தில் செய்ய வேண்டிய நிறைய பணிகள் உள்ளன. அதனால்த்தான் மொத்த குடும்பத்தையும் சமூகசேவையில் ஈடுபடுமாறு கூறியுள்ளார். பூச்சிக்கொல்லி மருந்தில்லாத நாடடை உருவாக்கி, சிறுநீரக நோயிலிருந்து மக்களை காப்பாற்றுவதே எனது நோக்கம்.



**கோத்தபாய ராஜபக்ச – முன்னாள் பாதுகாப்பு செயலாளர்**

யுத்தத்தின் பின்னர் யாரும் காணாமல் போகவில்லை. தமது பிள்ளைகளிற்கு என்ன நடந்ததென்பது வடக்கில் ஒவ்வொரு பெற்றோருக்கும் தெரியும். புலிகளின் போராட்டத்தில் இணைத்து கொண்டார்கள். அது தெரிந்தும் இப்பொழுது பிள்ளைகளை காணவில்லையென சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். காணாமல் போனவர்கள் அனைவரும் புலிப்போராளிகளே.



**சி.வி.விக்கினேஸ்வரன் – வடமாகாண முதலமைச்சர்**

விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் விவசாய உற்பத்திகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு அரிய பல திட்டங்களை உருவாக்கி வருகின்றார். கனிதரும் மரங்களையே கரவானவர்களின் கற்கள் பதம் பார்க்கும். அதனால் அவருக்கு எதிராகக் கற்கள் வீசப்படுவதை எதிர்பார்க்கத்தான் வேண்டும். எனினும் அமைச்சர் ஐங்கரநேசனும் பனங்காட்டு நரி. சலசலப்புக்கு அஞ்சமாட்டார். சதா மக்கள் நலம் பேணும் வேலைகளிலேயே மூழ்கி நிற்கும் ஒரு அமைச்சர். அவரின் வழிகாட்டலின் கீழ் நீங்கள் அனைவரும் இணைந்து கொண்டு விவசாய உள்ளீடுகளைப் பெருக்கப் பாடுபட வேண்டும்.



**கயந்த கருணாதிலக – அமைச்சர்**

கடவுளை வேண்டிக் கொள்வதன் மூலமாகவோ அல்லது தேங்காய் உடைத்து பக்திமயமாக செயற்படுவதன் மூலமாகவோ ஊழல் மோசடிக்காரர்கள் தப்பிக்கவும் முடியாது. ஊழல் மோசடிக்காரர்களை எந்தக் கடவுளும் காப்பாற்றவும் மாட்டார்கள்;. அதேபோல் திருடிய தேங்காய்களை உடைத்து ஆலயத்தில் வழிபடுவது கூட ஒரு விதத்தில் ஊழல் தான். அதற்கு கடவுள் இடத்தில தண்டனை உண்டு.



**மக்ஸ்வெல் பரணகம – ஜனாதிபதி ஆணைக்குழு தலைவர்**

இலங்கையின் உள்ளக விசாரணைகள் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்கள் இல்லாமல் இடம்பெற வேண்டும். நீதிப் பெரிமுறையானது முற்றிலும் உள்நாட்டு விடயமாக இருக்க வேண்டும். இலங்கையின் நீதி முறைமையை ஐ.நா ஆணையாளர் முழுமையாக கண்டனம் தெரிவிப்பது தவறு. ஏனைய நீதித்துறை முறைமைகளைப் போன்றே இலங்கையின் நீதித்துறையிலும் சில குறைபாடுகள் இருக்கின்றது.

# க்ளிக் பக்கம்

ஏருன்றி பயிர் விளைவிக்கும் உழவன் வானம் பார்த்த காட்சி. வானம் பொய்த்து விடுமோ என்ற ஏக்கமோ... அறுத்ததெல்லாம் விலைபோகுமோ என்ற ஏக்கமோ?

**என்னைப்பற்றி:** நான் மு.கயந்தன். மகாஜனக்கல்லூரியில் உயர்தரம் முடித்து தற்போது உயர்கல்வி கற்கிறேன்.ஓய்வுநேரங்களில் புகைப்படம் எடுப்பதுண்டு.



படப்பிடிப்பாளர்: கயந்தன்

இடம்: மல்லாகம்



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk




கடந்த வாரம் தீபத்தின் சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்ட படம் இதுதான். போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தி இராணுவத்தினரை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டாமென கூறி நடத்தப்பட்ட கையெழுத்து வேட்டையின் முதல்நாள். மேடையில் மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச சற்று அசந்த சமயத்தில் நாயொன்று மேடையேறிய காட்சி.



இணைய உலகத்தை கலக்கோ கலக்கென்று கலக்கும் விடயம் இது. பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் நடந்த சம்பவம். புகையிரதம் வருவதற்கான அபாய சமிக்ஞை இடப்பட்ட பின்னரும் அதை மீறி வடக்கு முதல்வரை பொலிசார் அழைத்து செல்கின்றனர். புகையிரதம் வருகிறதா என பொலிஸ்காரர் எட்டிப்பார்த்து 'றூட் கிளியர்' பண்ணி கொடுக்க, வாகனம் செல்கிறது. பிறகென்ன, இணையம், சமூக வலைத்தளங்களில் கச்சைகட்டிக் கொண்டு கோதாவில் குதித்து விட்டனர். சட்டத்தை மீறிய முதல்வர் என ஒரு தரப்பு எகிற, புகையிரதத்தை வைத்தே கொலைமுயற்சியென இன்னொரு தரப்பு மிரட்ட, கடந்த சில நாட்களாக சமூக வலைத்தளங்களில் ஒரே கலகலப்புத்தான்.



## இணைய யன்னல்

அண்மையில் ஐரோப்பிய காதல் ஜோடியொன்று மட்டக்களப்பு வந்து இந்துசமய முறைப்படி திருமணம் செய்து கொண்டனர்.



**www.facebook.com/suratha.yazhvanan**

பொங்கலும் பிரியாணியும் பண்டமாற்றிக்கொண்டால் மட்டும் இன ஒற்றுமை வந்துவிடாது! ? #மாயை



**www.facebook.com/mjmsharthaar**

மஹிந்தவின் புதிய கட்சி சின்னம் "தாமரை"யாம்!!!!
சரியாத்தான் தெரிவு செய்திருக்காங்க...... பீ ஜே பியின் கொள்கைகளை அச்சொட்டாக பின்பற்றும் "காவி"போய்ஸ்



**www.facebook.com/ashroff.shihabdeen**

"அதிவேக இணையத் தொடர்புக்கான கூகுள் பலூன் திட்டப் பரிசோதனையின் முதற்கட்டம் இரத்மலானையில் நடைபெறும்."
"ஓகே!"
"இத்திட்டத்தைச் செயற்படுத்துவதைக் கொண்டு உலக நாடுகளின் கவனம் நம் பக்கம் திரும்பியுள்ளது."
"குட்!"
"தகவல் தொடர்பாடல் வல்லுனர்கள் பங்கு கொள்ளும் மாநாடு ஜூன் மாதத்தில் இலங்கையில் நடைபெறும்!"
"வெரிகுட்!"
"இந்த பலூன் திட்டம் நமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது!"
"ஓ... கிறேற்!"
"கூகுள் நிறுவனத்தின் இணைய ஸ்தாபகர் சேர்ஜி ப்ரின் போன்றவர்கள் நமது நாட்டில் முதலீடு செய்யும் வாய்ப்புள்ளது."
"நல்லது சார்... சந்தோசம்.. ஆனா இணையத் தொடர்பு விலை குறையும்னு ஒரு வார்த்தை உங்க வாயாலே வரல்லியே சார்!"




**www.facebook.com/mynthan**

ஒரே ஒரு ஜி20 வெற்றிக்கு ஸ்ரீலங்கன் பேன்ஸ் ஏன் இவ்ளோ அட்றாசிட்டி-அராஜகம்?
ஸ்ரீலங்கன் டீம்ல இருக்கிறவங்க யார்னு நமக்கு கூட தெரியாதிருந்திச்சு..என்னமோ சந்திமல் தலைமைல புது டீம் ஒண்ணு இறங்கின பீலிங்..பெருசா கவனிக்கப்படாத ஙி டீம் போலதான் இந்தியாக்கு புறப்பட்டிச்சு ஸ்ரீலங்கன் டீம்.டோட்டலி இன் எக்ஸ்பீரியன்ஸ் டீம்.
அவுஸ்ல பேட்டிங்க்ல மிரட்டின இந்தியன் டீம்..ரோஹித் தவான் யுவராஜ் டோனி ரஹானேனு அனுபவம் மிக்க-அதிரடியான பேட்டிங் லைனப்.
இந்திய அணிக்கு உள்ளூர் மைதான சாதகம்.. எப்படியும் ப்ளாட் பிட்ச்தான் போடுவாங்கங்கிற எதிர்பார்ப்பு.. அதால இந்த முரட்டு பேட்டிங் லைனப்ல இலங்கைக்கு 200+ தான் டார்கெட்டா இருக்கும் எண்ட பயம்.
-101 டார்கெட்னாலும் கடைசி வரைக்கும் பொறுமை காத்த இலங்கை ரசிகர்கள்;காரணம் புதுப் பொடியங்கள் கையில பேட்"எ வைச்சுகிட்டு ப்ரஷர்ல என்ன பண்ணுவாங்களோ எண்ட பீதி.ஓபினிங் பேட்ஸ்மன் குணதிலக ஒரு டிபிக்கல் எக்ஸாம்பிள்.
சங்கா மஹேலவுக்கு பிறகு வெற்றிக்காக காத்திருந்த இலங்கை அணி ,டில்ஷான் மத்யூஸ் மலிங்க இல்லாம எப்பிடி வின் பண்றதுனு கவலையா இருந்த டைம்ல முதல் ஓவர்ல இருந்து பொடிப்பயலுக மிரட்டின விதம்.
டி20ல முதல்ரேங்ல இருந்து இந்தியா நம்மள பின்னாடி தள்ளின கடுப்பு+அந்த டீம ஒரு இன் எக்ஸ்பீரியன்ஸ் டீம வைச்சு அடிச்சு திரும்ப முதல் ரேங்ல சீட்ட போட்டு சிங்கம்போல உக்காந்தது..!
எது எப்பிடியோ,அடுத்த ரெண்டு மேட்ச்சும் ப்ளட் பிட்ச்ல தான்னு தெரிஞ்சு போச்சு.. 200+தான் டார்கெட்ன்னு புரிஞ்சு போச்சு..
இருந்தாலும்....
தட், "நீ பத்து அடி அடிச்சா தம்பி ஒரு அடியாச்சும் அடிக்கமாட்டேனா"மொமெண்டு..!

Like Comment Share





## நம்மூர் நாயகர்கள்

சுதுமலை பகுதி இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களிற்கு கல்வி உபகரணங்கள் வழங்கி வருகிறார்கள். குடும்பங்களிற்கு பயன்தரு மரங்களும் வழங்கிவருகிறார்கள். அண்மையில் சுதுமலை அம்மன் ஆலயம், ஈஞ்சடி வைரவர் ஆலய சூழலில் வாழும் மாணவர்கள் 25 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம இவை.




இந்தியாவின் திருவண்ணாமலை மாவட்டத்தில் நடக்கும் விசித்திரம். தண்ணீர் செல்லும் ஓடையில் வீடு கட்டியதால் இடிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. கட்டிய வீட்டை இடிக்க மனமில்லாமல், தள்ளி வைக்க பிரயத்தனப்படுகிறார்.



இந்தியாவில் நடக்கும் தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் சாதித்துள்ளார் பொத்துவிலை சேர்ந்த அஸ்ரப். 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தங்கம். 100 மீற்றர் அஞ் சலில் வெண்கலமென இரண்டு பதக்கம் வாங்கி அசத்தியுள்ளார்.



தங்காலை கடலில் மகிந்த ராஜபக்ச போட்ட ஜாலி குளியல் படம். வீடியோவும் வெளியாகி வைரல் ஹிட் அடித்துள்ளது. மல்லாக்காக சில நிமிடம் நீந்தி, நீச்சலில் கற்ற வித்தையையெல்லாம் காட்டியுள்ளார். தோஷம் கழிக்கத்தான் இந்த மல்லாக்கு நீந்தல் என சிலர் 'கிளப்பி' விட அதுவும் பரபரப்பாக பகிரப்பட்டது.




யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் மாணவ ஜோடிகள் நடத்தும் லீலைகளை பார்த்து கண் வியர்த்துப் போனவர்கள் இந்த அறிவித்தலை ஒட்டியுள்ளனர். 'ரொமான்ஸ் பண்ணாதீங்க' என நோட்டீஸ் ஒட்ட வேண்டிய நிலை.





# சுஷ்மா சூறாவளி

ஒரு பத்து வருடங்களின் முன்னர் சுஷ்மா சுவராஜ் என்றால் நம்மாட்கள் பலரிற்கு யாரென்றே தெரியாது. ஏதாவது இந்திப்பட நாயகியா என்றும் கேட்பார்கள். அதிகமேன் ஒரு பதினைந்து வருடங்களின் முன்னர் இந்தியாவிலேயே அவரை அதிகமாக தெரியாது. ஆனால் இன்று...

இந்தியாவின் செய்திகளுடன் உலகமெல்லாம் சுற்றிவரும் ஒருவர். மத்திய பா.ஜ.க அரசில் தீர்மானமெடுக்கும் வல்லமைமிக்க 'இந்திய இரும்புப் பெண்மணி' என்கிறார்கள். அரசியலில் அறிமுகமான சில காலத்திலேயே இந்தியாவின் முன்வரிசை பெண் தலைவராகிவிட்டார் சுஷ்மா.

சுஷ்மா என்றாலே பரபரப்பு, சர்ச்சையென்றிருக்கும் போதுதான் அண்மையில் இலங்கை வந்து சென்றிருக்கிறார். இரண்டு நாள் குறுகிய பயணத்தில் இப்பொழுது பேசப்பட்டுக் கொண்டிருக்கும் சூடான எல்லா விடயங்களையும் பற்றியும் பேசிவிட்டு சென்றுள்ளார் சுஷ்மா. இந்த வருடத்தில் இனப்பிரச்சனை தீர்வை அல்லது தீர்விற்கான முன்னோடி ஆயத்தங்களை கண்டுவிடலாமென்ற தமிழர்களின் நம்பிக்கைக்கு மேலும் 'உற்சாக ரொனிக்' கொடுத்துவிட்டு சென்றிருக்கிறார்.

மகிந்த ராஜபக்ச வீட்டுக்கு சென்ற காலம். முதன்முதலில் ஊடகங்களுடன் பேசிய போது இந்தியாவைத்தான் கடுமையாக தாக்கிப் பேசினார். தன்னை கவிழ்த்து விழுத்தியதில் இந்தியாவின் பங்கு முக்கியமாக இருந்ததாக புலம்பினார். தனது வல்லமையால் எதிராளிகளை கூறுபோட்டு வைத்திருந்த போது, இந்திய உளவுத்துறை அதிகாரியொருவர்தான் எல்லோரையும் ஓரணியில் திரட்ட பிள்ளையார் சுழி போட்டதென கோத்தபாய ராஜபக்ச பகிரங்கமாகவே குற்றம்சாட்டினார்.

யுத்தத்தின் பின்னரும் இலங்கை இனப்பிரச்சனை இழுபட்டுக் கொண்டே செல்வதை விரும்பாத இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், சகலராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் பேசித்தீர்த்து வைக்க முயன்றபோது மகிந்த ராஜபக்ச குறுக்கே நின்றதன் பின்னர்தான் இதெல்லாம் நடந்தது. சர்வதேச சக்திகளின் காய்நகர்த்தலில் மகிந்த ராஜபக்சவின் போர்வெற்றிவாத சாம்ராஜ்யம் சரிந்து விழுந்து விட்டது.

கிட்டத்தட்ட இலங்கையின் மறுமலர்ச்சிக் காலம் என சொல்லத்தக்க இந்தக்காலத்தில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வொன்றை எட்டிவிட வெளிச்சக்திகள் எல்லோரும் தீவிர ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதனால்த்தான் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வெளிவிகார அமைச்சின் அதிகாரிகள் கூமார மடித்தே தங்கவிட்டார்கள் இலங்கைக்கு வரும் சர்வதேச பிரதிநிதிகளை வரவேற்க.

இந்திய வெளிவிவகார அமைச்சர் வந்து செல்ல, மறுபக்கத்தால் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் வந்திறங்கினார். அடுத்தடுத்து நிகழ்ந்த இரண்டு விஜயங்களும் அரசியலரங்கில் அதிகம் கவனிக்கப்பட்டாலும், சுஷ்மாவின் விஜயம்தான் அதிகம் அதிர்வை ஏற்படுத்தியது. 'இரும்பு பெண்மணி' அடைமொழிக்கேற்ப சொல்ல வேண்டியவற்றை நேரடியாகவோ, மறைமுகமாகவோ சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பினருடனான சந்திப்பில் சுஷ்மா சொன்ன ஒரு விடயம்தான் ஹைலைட். 'இந்தியா எப்பொழுதும் நீதியின் பக்கமே நிற்கும். தமிழர் விவகாரத்தில் நியாயமான தீர்வு கிடைக்க அனைத்து முயற்சிகளும் இந்தியா செய்யும்' என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

சுஷ்மாவின் விஜயத்தின் போது சில உடன்படிக்கைகள் கைச்சாத்தாகின. ஜனாதிபதி, பிரதமர், தமிழ்தேசிய கூட்டமைப்பு, மலையக தலைவர்கள் உள்ளிட்டவர்களை சந்தித்தார். இதைவிட, இருநாட்டுக் கிடையிலும் சிக்கலுக்குரியதாக மாறிவரும் மீனவர் விவகாரம் தொடர்பாகவும் பேசினார்.

மீனவர் விவகாரத்தில் முதன்முறையாக இந்தியத்தலைவர் ஒருவர் மிக வெளிப்படையாக பேசிய நிகழ்வு சுஷ்மாவின் வருகையில் நிகழ்ந்தது. 'உணர்வுபூர்வமான இந்த பிரச்சனையை தீர்க்க மூன்று வருடங்களாவது ஆகும்' என்ற சுஷ்மா, இலங்கை கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட குழுவினரை இந்தியாவிற்கு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்து சென்றதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடிவு காலத்திற்கு எல்லாம் கூடிவந்த காலமாக் இது இருக்கலாம் போல்த்தான் தெரிகிறது. சர்வதேச அபிப்பிராயங்களும், பிராந்திய அபிப்பிராயங்களும் வேறுவேறு திசையில் இருந்தது ஒரு காலம். அதுவே, இலங்கையில் குழப்பம் நீடிக்க ஒரு காரணமாகவும் அமைந்தது. இப்பொழுது எல்லாம் கூடி வந்துள்ளதைப் போலத்தான் தெரிகிறது.





NALIN Information Technologies (Pvt) Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
Tel : 021 222 1121 | 021 222 1166 | 077 766 7975
Web : www.nit.lk | E-mail : nalin@nit.lk | FB : nalin it

HP 15 - AC003TX - Intel Core i5

- HP 15 - AC003TX
- Intel Core i5 Processor
- 4 GB DDR3
- 500 GB HDD
- DVD/RW+DL
- Wifi/CR/BT
- 15.6 LED
- 2 GB ATI R5 M330 Dedicated
- Free Dos
- 1YR + 2YR Service
- Webcam



# நினைவலாத 'கோல்டன் பீரியட்'



யாழ் நரிக்குண்டு

✒ செல்வம்
selvam@deepam.lk

தமிழர்களின் காதல் பொற்காலம் என்றால் அது 90கள் தான் என அடித்துக் கூறுகிறார்கள் நடுத்தர வயதுக்காரர்கள். காதல் எல்லாக்காலத்திலும் இருந்தாலும் 80களின் பின்னர்தான் நம்மவர்கள் துணிச்சலாக காதலிக்க தொடங்கினார்கள். உயர்கல்வி, வேலைவாய்ப்பு, பெருநகரங்கள் போன்ற வாய்ப்புக்கள் அதன் பின்னர்தான் உருவானவை. இதற்காக வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கிய இளையவர்களை நவீன உலகம் வாவா என வரவேற்கத் தொடங்கிய காலம்.

ஆளுயர கிடுகு வேலிக்கு மேலாக எட்டிப்பார்த்து பார்வையால் மட்டும் காதல் செய்தவர்கள் முதன்முதலில் எதிரெதிரில் உட்கார்ந்து பேசும்காலம். எட்டத்திலிருந்து சில விநாடிகள் பார்வையால் மட்டும் பேசிக்கொண்டவர்கள் நேரில் காணும்போது எல்லைமீறும் தைரியத்தை பெற்றிருக்கவில்லை. எதேச்சையான ஸ்பரிசங்களே பெரும்பேறாய் இருந்த காலம். 'காய் வெட்டல்' என்ற சொல் காதலகராதியில் புகுந்திருக்கவில்லை. வெளிநாட்டு மாப்பிள்ளைகள் உள்ளூர்காதலிற்கு வில்லனாகவுமில்லை.

காதலென்பது புதிர், சுவாரஸ்யம், திடீர்திருப்பங்கள் நிறைந்ததாக இருந்த காலமது. காதலர்களிற்கிடையிலான அதி நவீன தொடர்பு சாதனம் அரப்பழசான கடிதம் மட்டுமே. யாராவது அதிர்ஸ்டசாலிகளிற்கு மட்டுமே உள்வீட்டு நண்பனிருந்தான். மற்றும்படி நேரில் சந்திக்கும் வரை அல்லது யாரிடமாவது தூது அனுப்பும்வரை துணைக்கு நடக்கும் சம்பவம் மற்றவரிற்கு தெரியாது. இதனால்த்தான் அந்தக்கால காதல் சுவாரஸ்யம் நிறைந்தது, பிடிமானம்மிக்கதென்கிறார்கள் அந்தக்கால அனுபவஸ்தர்கள்.




இந்தக்காலத்தில்தான் இரண்டு வெற்றிகரமான காதல் சூத்திரங்கள் உருவாகின.

முதலாவது, மகளை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைக்கும் மன்சூர்அலிகான் பாணி வில்லன் அப்பா. மகள் காதலிக்கிறாள் என்பதை அறிந்தால் வீட்டுக்குள் அடைத்துவைக்கும்சினிமாப்பாணி வில்லன் அப்பா என்பது நிஜத்தில் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள அப்பாக்களின் பிரதிநிதியே. ரியூசனிலோ, கோவிலிலோ மகள் யாராவது ஒருத்தனுடன் கதைக்கிறாள் என்று அறிந்தால், அந்தக்கணமே மகளின் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் மன்சூர் அலிகான்கள்தான் அந்தக்கால அப்பன்கள் ஒவ்வொருவருமே. அதைதாண்டி மனம்கவர்ந்தவளை சிறைமீட்ட 'தில்'தான் அந்தக்கால காதலர்களின் பசுமையான நினைவிற்கு காரணம்.

இரண்டாவது சூத்திரம், நட்பு. அந்தச்சமயத்தில் ஒவ்வொரு காதலின் பின்னாலும் நண்பனோ, நண்பியோ இருப்பார்கள். 'அவன் பாவம்', 'அவன் நல்லவன்', 'உனக்காக சாப்பிடாமல் கொள்ளாமல் இருக்கிறான்' என சென்டிமென்டின் அடியாழம்வரை இறங்கி கலக்குவது இவர்கள் பணி. பின்னர் 'நான் போட்ட கலரில் நீ உடுப்பு போடவில்லை' என்பது மாதிரியான ஒருசதம் பெறுமதியில்லாத விடயங்களில் காதலர்களிற்குள் சண்டை வரும்போதும், இடைத்தூதர்களாக நின்று 'எல்லாம் சுபமே' என முடித்து வைப்பதும் இவர்கள்தான்.

## அன்பே உன் ஞாபகத்தில்...

அந்தக்காலத்தில் பருவத்தை உணரும் ஒவ்வொரு ஆண்மகனின் தேசியகீதமாகவும் இருந்தது 'பொன் வானில் மீனுறங்க பூந்தோப்பில் தேனுறங்க' என்ற யேசுதாஸ் பாடல். காதல் கொள்ள ஆரம்பித்தவர்கள், கொண்டவர்கள், ஏதாவது பிரச்சனையில் சிக்கியவர்கள் என எல்லோருக்கும் பொருத்தமாக அமைந்துவிட்ட பாடல்.

இன்றைய காதலர்களை போல அப்பொழுது காற்றும்புக முடியாத நெருக்கத்துடன் நகரவீதிகளிலும், பார்க்கிலும், கேஎப்சியிலும் ஒட்டிக் கொண்டு திரிய முடியாது. கலாசார கட்டுப்பாடுகளிற்கு பயந்து காதலித்ததால்த்தான் அன்றைய காதல் 'கோல்டன் லவ்' என்கிறார்கள் நடுத்தர வயதுக்காரர்கள்.

வீட்டுக்கு, உறவினர்களிற்கு, நண்பர்களிற்கு, அறிந்தவர் தெரிந்தவர்களிற்கு, தெரியாதவர்களிற்கு என சகலருக்கும் பயந்து அப்போதைய காதலர்கள் எங்கெங்கு சந்திப்பார்கள் தெரியுமா?

## கோயில்கள்

காதல் வந்தால் கூடவே பக்தியும் வரும். ஒருநாள் கூட கோயில்ப்பக்கம் திரும்பாதவர்கள் காலை, மாலை கோயிலுக்கு போவார்கள். கோயிலில் எப்பொழுதாவது வாய்க்கும் சில நிமிடங்கள்தான் 'காதல்நேரம்'. பெரும்பாலும் 'கண்பேசும் வார்த்தைகள்'தான். ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு கோவிலிருக்கும். அவற்றில் பிரபல்யமான சில இவை. நல்லூர், கோட்டை முனியப்பர், செல்வச்சந்நிதி, அல்வாய் முத்துமாரியம்மன், வல்லிபுர ஆழ்வார், கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன், வவுனியா கந்தசுவாமி கோவில், வற்றாப்பளை கண்ணகியம்மன் திருவிழாகாலம், புதூர் நாகதம்பிரான் திருவிழாக்காலம் என்பன குறிப்பிட்டு சொல்லத்தக்க காதல் சந்திப்பிடங்கள்.

## லவ் லேன்ஸ்

எப்பொழுதும் கோவில் கைகொடுக்காது. கடவுளும், மனிதர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்

> **'ஐயோ ஆக்கள் பாக்கினம். பேசாமல் போங்கோ' என திட்டுவார்கள். எத்தனை நாள்த்தான் சைகையால் காதலிப்பது? என்ன நடந்தாலும் பரவாயில்லையென சில சமயங்களில் நேரில் சந்திக்க முடிவுசெய்வார்கள்.**

இடத்தில் அன்னியோன்யமாக காதலிக்க முடியாது. சாதாரணமாக பேசவே காதலிகள் தயங்குவார்கள். ஏதாவது சிக்னல் கொடுத்தால்கூட, முகத்தை அஸ்டகோணலாக்கி 'ஐயோ ஆக்கள் பாக்கினம். பேசாமல் .போங்கோ' என திட்டுவார்கள்.எத்தனை நாள்த்தான் சைகையால் காதலிப்பது? என்ன நடந்தாலும் பரவாயில்லையென சில சமயங்களில் நேரில் சந்திக்க முடிவுசெய்வார்கள். பிரச்சனையில்லாத சந்திப்பிடங்கள் என்பது ஆட்கள் நடமாட்டம் குறைந்ததோ, வீடுகள் உள்ளொடுங்கியிருப்பதோ, பலவீதிகளுடன் தொடர்புடையதாகவோ (அறிமுகமில்லாத ஆட்களைத்தான் எதிர்ப்பட வேண்டும்) இருக்கும்.

அப்படி பிரபலமான வீதிகள் சில நரிக்குண்டு, மணல்த்தரை லேன், ஆனைக்கோட்டை மாட்டொழுங்கை, உடுவில் லவ் லேன், பருத்தித்துறை தும்பளை வீதி, வதிரி வீதி, கிளிநொச்சியில் திருவையாறுவீதி, வவுனியா நெளுக்குளம் வீதி.

## ஸ்பரிச லவ்

என்னதான் காதல் புனிதம், தெய்வீகம் என கதைசொன்னாலும் காதலியை விட்டு ஒருஅடி தள்ளி நின்று லவ் பண்ணுபவனல்லாம் உலகத்தில் கிடையாது. அன்பான ஸ்பரிசம் என்பது காதலின் உற்சாக டொனிக். அதற்கு எங்காவது உட்கார்ந்து பேச வேண்டும்.

ஊரின் கண்ணில் மண்ணைப் போட்டுவிட்டு நம்மாட்கள் உட்கார்ந்து பேசிய இடங்களில் சில இவை.

தும்பளை மூர்க்கம் கடற்கரை, வல்லிபுர கோயில் ஆலமர நிழல், வவுனியா நகர தியேட்டர்கள் என்பன அவற்றில் சில.

இன்றும் நினைவுகளை அசை போட்டுக்கொண்டிருக்கும் 90களின் காதலர்களிற்கு இவையெல்லாம் பொக்கிசமான நினைவுகளாக இருக்கும்.



ஆனைக்கோட்டை மாட்டொழுங்கை



யாழ்.முனியப்பர் கோயில்



மணல்த்தரை லேன்

# எப்படி சொல்கிறார்கள் காதலை?

காதல் இல்லாமல் யாராலும் வாழ முடியுமா?. ஹிட்லர் மாதிரி ஒரு சர்வாதிகாரி நாட்டை ஆண்டு, ஒரு பயபிள்ளை காதலிக்க கூடாது என ஒரு சட்டம் இயற்றிவிட்டார் என வைத்துக் கொள்வோம். எப்படியிருக்கும் வாழ்க்கைஞ் நினைக்கவே ஈரல் குலை நடுங்குகிறதல்லவா.

அதுதான் காதலின் மகிமை.

இந்தக்காதலை மனிதர்கள் வெளிப்படுத்தும் முறையிருக்கிறதே... அடடா அதுவொரு கவிதை. எவ்வளவு பெரிய கர்ணகடூரமானவர்களாக இருந்தாலும் ஒரு பூ மலர்வதைப் போல காதலை வெளிப்படுத்துகிறார்கள். டியூப்லைட் எரிவது, மணியடிப்பது மாதிரியான நிறையச்சங்கதிகள் நடந்ததன் பின்னர் காதலைச் சொல்கிறார்கள்.

என்னதான் பெரிய கோயில்மணியே 'டாங்' என அடித்தாலும் நம்மவர்கள் கொஞ்சம் கூச்சநாச்சம் மிகுந்தவர்கள். பார்த்து பவ்வியமாகத் தான் காதலைச் சொல்வார்கள். அதை நேராக சொல்லாமல் தூதுவிட்டு, கடிதம் கொடுத்துதான் நீண்டகாலமாக காதலைச் சொன்னார்கள். பாட்டுப்பாடி வேறு காதலைச் சொல்லும் நாயகர்களை சினிமா காட்டிவிட்டது. ஆக, வகை பிரிக்க முடியாதளவு வழிகளில் நம்மவர்கள் காதலைச் சொன்னார்கள்.

ஆனால் இப்போதைய இளசுகள் பயங்கர அட்வான்ஸாக உள்ளனர். ஒரு பெண்ணைப் பார்க்காமலே அவரது சாதகத்தில் உள்ள குறைபாட்டிற்கு பரிகாரம் சொல்லும் பயல்கள் இந்தக்காலத்தில் உள்ளனர். படுபயங்கர ஸ்பீடில் ஓடிக் கொண்டிருக்கும் இளசுகளிற்கு சமூகவலைத்தளங்கள் நிறைய உதவிகரமாக உள்ளன. எல்லோரும் உயர்கல்விக்கு, வேலைக்கு வீதிக்கு இறங்குகிறார்கள். நேரில்பேசிக் கொள்கிறார்கள். முன்னைய காலஇதயம்பட முரளி மாதிரி இருக்கத் தேவையில்லை.

நமது இளசுகள் இந்தக்காலத்தில் எப்படியெல்லாம் காதலைச் சொல்கிறார்கள் என்பதை அறிய ஒரு ரவுண்ட் அடித்தோம். ஆங்காங்கே அகப்பட்டவர்களை ஓரங்கட்டி, கேட்டோம்.




**ந.சாரங்கன்**

நான் என்னோட லவ்வை ப்றபோஸ் பண்ணப் போறேன்னா நிச்சயம் செண்டிமெண்ட் றூட்லதான் போவன். செண்டிமென்டாக பேசி கவிழ்க்கப் போறான் என எழுதிடாதீங்க, அதுதான் நமது கல்ச்சர் பாஸ். முதல்ல அவளோட மனசில செண்டிமெண்டா பதியிறமாதிரி ஏதாச்சும் செய்யணும். அதற்காக படத்தில் மாதவனிட்ட ஐடியா கேட்டு வடிவேலு செய்யிற மாதிரி கற்பனை பண்ணீடாதீங்க மகாசனங்களே. நமக்கு எது சரியென்று படுதோ, அதை செய்வம். அதைச் செய்தாலே, என்னமேல அவளுக்கு ஒரு 'இது' வரும். அதுக்குப்பிறகு நேராப்போய் அவள் கண்ணப்பாத்து காதலை சொல்வன்.



**ச.சனுசன்**

நான் என்ர லவ்வ பேஸ்புக் சற்றில சொன்னன். அவள நேர்ல பார்த்து எல்லாம் என்னால் சொல்ல முடியாது. நாங்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு உள்ள ஜீவன்களாக்கும். அதைவிட, அவவின்ர போன் நம்பர் கூட என்னட்ட இருக்கவில்லை. முதல்ல பேஸ்புக்ல ப்ரெண்ட் ரெக்வெஸ்ற் கொடுத்தன். அக்சப்ற் பண்ணல. எப்படியோ, கால்ல கைலவிழுந்து ப்ரெண்டாக்கினன். பிறகு ஒரு 'ஹாய்' சற். வழக்கம் போல கண்டுகொள்ளாமல் போனா. விட்டிடு வமா? ஹாய் மேல ஹாய் போட்டு கண்டு கொள்ள வைச்சு, சற்றிலயே 'உன்னட்ட ஒரு முக்கியமான விசயம் சொல்ல வேணும். ஐ லவ் யூ' என்றன். இதை துணிவாக சொன்னதாக நினைக்காதீங்கப்பா. நடுக்கத்தோட சொல்லிப்போட்டு, சட் டவுண் கூட செய்யாமல் பட்டனை ஒரு அமுக்காக அமுக்கி கொம்பியூற்றரை ஓவ் பண்ணி வைச்சிட்டன். இப்பிடி ரணகளமாகத்தான் காதல் மலர்ந்தது.



**க.அஜித்**

நாங்களெல்லாம் குடும்பத்துக்கு அடங்கிய பையன்கள். இதுவரை லவ் கிவ் என போகவில்லை. இதை சொன்னால் வீட்டிலயே நம்பமாட்டினம். ஆனால் உண்மை அதுதான். யாரிட்டயாவது காதலைச் சொல்லுறதென்றால் நிச்சயம், நேரிலதான் சொல்லுவன். நமக்காக பிறந்த அந்த மகாராணி அந்த நேரத்தில எப்பிடி ரியாக்சன் காட்டுவா என்றதை நேரில பார்க்காமல் என்ன பாஸ் காதலை சொல்லுறது. ஒரு அழகான, அமைதியா இடத்தில நேரில சொல்லுவன். அதுவரை ஐயாம் வெயிற்றிங்.



**ஆ.பிரகாஸ்**

இதையெல்லாம் எப்படி நேர்ல சொல்றது? பச்சை உடம்பு பாஸ். அடி தாங்காது. பாதுகாப்பான ஒரேவழி, கடிதமாக எழுதி அவளிட்ட குடுத்திடுவன். கடிதமென்றால் வைரமுத்து, வாலி, கண்ணதாசன் மூன்று பேரும் சேர்ந்து எழுதினது மாதிரி எழுதுவன். நேரில சொல்லும்போது பதற்றத்தில நிறைய விசயத்தை விட்டிடுவம். கடிதமென்றால் ஒருவிசயமும் விடாமல் எல்லாத்தையும் சொல்லலாம். வட்ஸ் அப் தொடர்பு கிடைச்சால் அதிலயும் சொல்லலாம்.



**கு.மதுமதி**

எனக்கு நேர்லதான் லவ்வ சொன்னாங்க. அது எனக்கு பிடிச்சிருந்தது. கெத்தா நேரவந்து என்னைப்பாற்து சிமார்ட்ட லவ்வ சொல்லும்போதே, அவர் நேர்மையானவரா இருப்பாரென்று நினைச்சன். இது தவிர வேற வளிகள்ள சொல்ற காதலை நான் பெருசா விரும்பிறதில்ல. குறிப்பா சோசல்மீடியாஸ் பிறப்போசல்களில எனக்கு சுத்தமாக நம்பிக்கையில்லை.



**லோ.பிரணவன்**

கண் ஜாடைல சொல்ற காதல்தான் உயிரோட்டமா இருக்கும். ஒரு சின்னப் பார்வை. ரொமான்டிக் லுக் ஒன்றே போதும் நமது காதலை அவள் மனசில முத்திரையாக பதிக்க. அந்த சமயத்தில அவளிட்டயிருந்து வரும் ரியாக்சன், குறிப்பாக வெட்கமிருக்கே... அப்பப்பா... சொல்ல இந்த ஜென்மம் போதாது தலைவா.






**இ.சுபாசினி, யாழ்ப்பாணம்**

முதலில் ஆண்களுடன் நண்பர்களாகப் பேசிப் பழகித்தான் பெண்கள் காதலை வெளிப்படுத்துவது வழக்கம். அவனின் செல்போன் நம்பருக்கு அடிக்கடி மிஸ்ட்கோல் கொடுத்து, ஏதாவது அலுவல் இருப்பதைபோல காட்டி, தொடர்பை பேணுவாள். இதுவும் காதலின் அறிகுறிதான். காதலனின் பிறந்தநாள் என்றால் கடைகளை கலங்கடித்து விடுவாள். இலகுவில் கிடைக்காத பொருளொன்றை எப்படியோ வாங்கி கொடுத்துவிடுவாள். அனேகமாக அவளது தெரிவு பிரமாதமாக இருக்கும்.

காதலர்தினம் வரும்வரை காத்திருந்து காதலை வெளிப்படுத்துவார்கள். வழக்கமாக சந்திக்கும் இடத்தில் கவிதை மூலமோ, பரிசுப்பொருள் மூலமோ காதலை சொல்வாள். முகநூல் உள்ளவர்களிற்கு இன்னும் வசதி. அங்கேயே பார்த்து கொள்வார்கள்.



**ச.தனுஷா, கொக்குவில்**

பெண்கள் கடிதத்தைக் கொடுத்து காதலை வெளிப்படுத்துவது தற்போது குறைந்து வருகிறது. ஆனால் இன்றைய நவீன தொழில்நுட்ப உலகத்தில் காதலை நாகரிகமாக வெளிப்படுத்த விரும்புகிறார்கள். அதாவது ஒருவரை பெண்ணொருத்தி விரும்புகின்றாள் என்றால் அதனை நேரடியாகச் சொல்லாமல் அவர் புரியும் படி நடந்து கொள்ளுதல். அவர் அணியும் சேட் தொப்பியின் நிறத்தில் அவளும் சட்டை தொப்பி அணிந்து அவர் பார்வைக்கு தெரியும் படி ஊரில் உலாவுதல். கோயில் திருவிழா, விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது அவர் பக்கம் நின்று கொண்டு கடவுளை வணங்குதல். ஐயர் வழங்கும் சந்தனம் குங்குமம் விபூதியை அவர் தனது நெற்றியில் பூசிவிட்டு மிகுதியை கோயில் துலீணில் கொட்டிவிட உடனே அந்த இடத்துக்குச் சென்று அவர் பார்க்கும்போது அந்த குங்குமத்தை மட்டும் எடுத்து நெற்றியில் இட்டு தனது காதலை வெளிப்படுத்தல். விளையாட்டுப் போட்டிகளில் அவர் பக்கம் நின்று அவர் எந்த கழகத்துக்கு சார்பாக கைதட்டி உற்சாகப்படுத்துகிறாரோ அவளும் அந்தக் கழகத்துக்குச் சார்பாக கைதட்டி அவர் பார்க்கும் அளவுக்கு அவளும் பார்த்து தனது காதலை வெளிப்படுத்துவாள்.




**நா.துளசிகா, கொக்குவில்**

வகுப்பறையில் காதலை வெளிப்படுத்துவது இலகுவானது. நான் படித்த வகுப்பறையில் நண்பிகள் சிலர் காதலை தெரியப்படுத்திய விதத்தைப் பார்த்திருக்கிறேன். அதாவது அவர் அமர்ந்திருக்கும் ஆண்கள் வரிசையில் உள்ள வாங்கிலின் அருகேயுள்ள பெண்கள் வரிசையிலஅவள் இருந்து கொண்டு அடிக்கடி அவரை இடக்கண்ணால் பார்த்து தனது காதலை வெளிப்படுத்தினாள். ரியூசன் வகுப்பு முடிவடைந்து நான் முந்தி நீ முந்தி என்று எல்லோரும் வீட்டுக்கு போகும் போது அவள் மட்டும் தனியாக அவன் பின்னால் அடக்க ஒடுக்கமாக அவன் திரும்பும் சந்தி வரை சென்று அவன் திரும்பியதும் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி அவன் அவளைத் திரும்பிப் பார்க்கும் படி பெல் அடித்து விட்டு அவன் அவளைப் பார்க்கும் போது பார்க்காதது போல செல்வாள். தனது பாடக் கொப்பியில் அவனின் பெயரை தனது பெயரின் முதல் எழுத்துடன் எழுதி தனது நண்பிகளுக்குக் காட்டி அவர்கள் அதனைச் சத்தமாக வாசித்துக் காட்ட இதன் மூலம் தனது காதலை அவனுக்குத் தெரியப்படுத்துவாள்.



**நா.டயானா, யாழ்ப்பாணம்**

சகை மூலம் காதலை பெண்கள் வெளிப்படுத்துவார்கள். அவன் பார்க்கும் போது கைவிரலால் இதயம் செய்து காட்டி அவனை பிடிக்கும் என்று பெண்கள் காதலை வெளிப்படுத்துவர். பிளேன் முத்தம் கொடுப்பதுடன் கண்வெட்டாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்து தமது காதலை பெண்கள் வெளிப்படுத்துவார்கள். சங்கிலியில் தமது பெயருக்கு முன்னால் காதலனின் பெயரைப் பதித்து சட்டைக்கு வெளியில் தெரியும் படி அணிந்திருப்பார்கள். சிறிராம ஜெயம் கொப்பி முழுவதும் எழுதுவது போல அவனுடைய பெயரை கொப்பி முழுவதும் எழுதி தமது விருப்பத்தை வெளிப்படுத்துவார்கள். வகுப்புக்கு அவன் வராவிட்டால் ஏன் வரவில்லை என்று அவனது நண்பர்கள் எல்லோரையும் கேட்டு தனது காதலை நண்பர்கள் மூலம் வெளிப்படுத்துவாள்.






# 'அன்லிமிட்டட் பக்கேஜ்'

சுட்டு
chuddu.deepam@gmail.com

'நைன்ரிஸ் அங்கிள்ஸ் இப்படித்தான் ராமராஜன் படத்தை பார்த்து விட்டு, பசுமாட்டை சுற்றிசுற்றி வந்து டூயட் பாடுவார்கள். கேட்கவே போராடிக்கும். அதைவிட்டுவிட்டு அட்வான்ஸாக காதலியுங்கள் பாஸ்' என 'தெறி'க்கிறார்கள் இந்தக்கால இளசுகள்.

இந்த தலைமுறையின் காதல் 'அன்லிமிட்டட்' பக்கேஜ். எல்லையும் கிடையாது, வரையறையும் கிடையாது. சுதந்திரப்பறவைகளாக சிறகு விரிக்கிறார்கள்.

இந்ததலைமுறையின் உள்ளங்கைக்குள் ஒரு குட்டி உருண்டையாக உலகம் அடங்கி விட்டுள்ளது. அதனால்த்தான் த்ரிஷா இல்லாட்ல் நயன்தாரா என 'ஜென்' மனநிலையில் பேச ஆரம்பிக்கிறார்கள். பேஸ்புக்கில் கனடாவில் உள்ள மச்சாளுடன் கடலை போட்டுக்கொண்டிருக்கும்போதே, அதுவரை முகமே தெரியாத ஒருத்தியிடம் மொத்த சாதகத்தையே சமர்ப்பித்துக் கொண்டிருப்பான்.

நமது பெண்களும் குறைந்தவர்களா?. நான் யாருடனும் அவ்வளவாக பேஸ்புக்கில் சற் பண்ணுவதில்லை, மெசேஜ் பண்ணினால் ரிப்ளை பண்ண மாட்டன் என நிமிடத்திற்கொருமுறை சொல்லிக் கொண்டு, முகம் தெரியாதவனுடன் மணிக்கணக்காக உருகிக் கொண்டிருப்பார்கள்.

இந்தக்கால இளசுகள் எல்லோரது கையில் ஒரு ஸ்மார்ட்போன். பேஸ்புக் உள்ளது. வட்ஸ்அப் உள்ளது. வைபர் உள்ளது. ருவிற்றர் உள்ளது. இன்னும் ஏராளம் தொடர்பு வழிகள் உள்ளன. அந்தக்கால மன்சூரலிக்கான பாணி வில்லன் அப்பாக்களிடம் இந்த ரெக்னோலஜியை சமாளிக்க ஒரு வழியுமில்லை. டாட்டா காட்டிச் செல்லும் பிள்ளையை தடுக்க, வெளிநாட்டு மாப்பிள்ளை என்ற ஒரு சமாளிப்புத்தான் உள்ளது.

இப்பொழுது எல்லா இளம்பெண்களிடமும் வீட்டில் வாங்கிக் கொடுத்த டப்பா போனுடன், காதலன் பரிசளித்த ஸ்மார்ட்போன் உள்ளது. டப்பா எப்போதும் சைலண்ட்மோடில்தான் இருக்கும். பிள்ளையை காணவில்லை பெற்றவர்கள் அழைத்தால், 'வந்திட்டிருக்கிறனில்ல.. சும்மா எந்த நேரமும்' என ஒற்றைவரியில் சீறிவிழுந்து பதிலளித்து கட் பண்ணத்தான் டப்பா.

காதல் மேற்றர் எசகுபிசகாகி வீட்டிற்கு தெரிந்தால் டப்பா போனை பறித்துவிட்டு பிள்ளையை வீட்டிற்குள்ளேயே அடைத்து விடுவார் அப்பா. 'நாலுநாள் வெயிலில் போகாவிட்டால் கொஞ்சம் சிவப்பேன்' என 'ஸ்மார்ட்' லவ் செய்வாள் பிள்ளை.

காதலர்கள் சந்தித்து பேசவே குலை நடுங்கிய காலத்தவர்களின் பிள்ளைகள் பகிரங்கமாகவே காதலிகளிற்கு சிலை வைக்கிறார்கள். ஆண் பெண் நட்பென்பது சர்வசாதாரணம். உயர்கல்வி, வேலைவாய்ப்பு, புலம்பெயர் கலாசார தாக்கமெல்லாம் சேர்ந்து இளைய தலைமுறையின் உலகம் மிகவும் மாறிவிட்டது. கூடப்படிக்கும் நண்பனின் வீட்டிற்கு செல்லும் நண்பிகள் சர்வசாதாரணம்.






யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, ம்டக்களப்பு நகரங்களில் நெருக்கமான காதல் ஜோடிகள் சர்வசாதாரணம். இவர்கள் ஒட்டிப்பிறந்தவர்களாக இருப்பார்களோ என பார்ப்பவர்கள் தலையை பிய்த்துக் கொள்ளுமளவு நெருக்கம் காண்பிப்பார்கள். பெருசுகள் முணுமுணுத்துக் கொள்ளுமளவிற்கு பேரூந்துகளிற்குள் நெருக்கமிருக்கும்.

ஏ.எல் முடித்து 'வயதுக்கு வந்ததும்' உள்ளூரில் இருக்கும் கொம்பியூட்டர் சென்ரரை விட்டுவிட்டு, முப்பது நாற்பது கிலோமீற்றர் போய் விஷி ளிதிதிமிசிணி படிக்க இளசுகள் விரும்புவதெல்லாம் இதனால்த்தான்.

### ஒரு அடி இடைவெளி காதல்

இன்றைய திகதியில் யாழ்ப்பாணத்தில் காதலர்களின் டீசன்ட் தலைநகரம் கார்கிள்ஸ் சதுக்கம்தான். பெரும்பாலான காதலர்கள் வந்து நாகரிக காதல் செய்வது இங்குள்ள இரண்டாவது தளத்தில்தான். ஒரு கப் கோலாவும், கொஞ்சம் சிப்ஸ்சும் எடுத்து ஒருநாள் முழுவதும் ஒரு ஜோடி கொறிக்கும் காட்சிகள் அங்கு சர்வசாதாரணம். காதலில் ஒரு அடி இடைவெளி பேணும் கட்டத்தில் எல்லா காதலர்களும் இங்கு முகாமிடுகிறார்கள். கொஞ்சம் தாராளமான சாப்பாட்டு பிரியர்களிற்கு விருந்தளிக்கும் விதவிதமான உணவுகளும் அங்கு உள்ளன.

அங்குபோனால் செலவாகுமே என ஜோடிகள் தடுமாறுவதில்லை. வீட்டிலிருந்து கட்டிக்கொண்டு செல்லும் உளுத்தம்மா பார்சலை அவிழ்த்து கடை விரிப்பவர்களும் உள்ளனர்.

### இடைவெளியில்லாத காதல்

இந்தக்காலத்து காதலின் தனியடையாளமே வேகம்தான். அங்கவை, சங்கவையுடன் பார்த்து, பேசி, பழகி காதலிப்பதெல்லாம் ரஜினிகாந்த் கால ஸ்ரைல். பார்த்தோமா, காதலித்தோமா முடிந்தால் கல்யாணம் அல்லாவிட்டால் பூஜா இல்லாவிட்டால் ஆயா என போய்க்கொண்டேயிருப்பது இந்தக்கால காதல். இதில் ஓரடி இடைவெளி பேணிக்கொண்டிருப்பவனையெல்லாம் 'அவனாடா நீ' என்றுதான் நண்பர்கள் கேட்கிறார்கள்.

காதலென்றால் எல்லாமிருக்கும் என்று சொல்லும் காதலர்களின் சொர்க்கபுரியாக அனேகமாக கடற்கரைகள்தான் உள்ளன. யாழ்ப்பாணத்தில் பண்ணைக்கடற்கரை, கோட்டை, காங்கேசன்துறை தல்செவன ஹோட்டலும் அதனையண்டி கடற்கரையும், கீரிமலை கடற்கரை, பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரை, கசூரினா கடற்கரை என்பன இதில் பிரபல்யம்.

### வெள்ளையாக வரும் வில்லன்

வெள்ளையாக இருக்கிறவன் பொய் சொல்ல மாட்டான் என்பது சினிமாவிற்கு பொருத்தமாக இருக்கலாம். ஆனால், நிஜத்தில் நமது இளைஞர்களிற்கு உள்ள ஒரேயொரு வில்லன் வெளிநாடுகளில் இருந்துவரும் இளைஞர்கள்தான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலான 'அம்ச'ங்களுடன் பெண்களை பிடிப்பதெனில் ஊரில் உள்ள பெண்கள்தான் என நினைக்கும் புலம்பெயர் தமிழர்கள் வீசும்வலையில் ஊரிலுள்ள அழகிகள் எல்லாம் அள்ளுண்டுபோகிறார்கள் என்பதுதான் இன்றைய பையன்களின் பெரும் தலையிடி.

காதலித்தோமா உடனே கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்ற உத்தியை பல பையன்கள் கைக்கொள்வது இதனால்த்தான். அழகான பெண்களை காதலித்தால் தாலி கட்டும்வரை மனசு பக்பக் என அடித்துக் கொள்கிறதென திகிலுடன் பேசுகிறார்கள் இன்றைய காதல் பையன்கள். பெண் வீட்டுக்கு தெரிந்தால், சென்ரிமென்டாக பேசி கவிழ்த்து பிள்ளையை வெளிநாட்டுக்கு பார்சல் பண்ணுவதை நல்லாட்சியிலாவது நிறுத்திக் கொள்ள வேண்டுமென்பது அவர்களின் ஏகோபித்த 'அரசியல் கோரிக்கை'.

# காதலின் தெறி வசனங்கள்

சுட்டு

**தமிழ் சினிமா காதலில் எவ்வளவு தூரம் ஊடுருவியுள்ளது?**

காதலிக்கும் காலத்தில் பலருக்குமுள்ள தலைபோகும் பிரச்சனை காதலை சொல்வதென்பதிலேயே. எப்படி காதலைச் சொல்வதென்ற குழப்பத்திலேயே நீண்டகாலத்தை பலர் செலவிட்டு விடுகிறார்கள். காதலை சரியாக வெளிப்படுத்த முடியாததாலேயே ஊற்றிக் கொண்ட காதல்களும் அனேகம்.

எப்பொழுதும் பட்டாம்பூச்சி பறந்து கொண்டு, எதை பார்த்தாலும் புல்லரித்துக் கொண்டு திரியும் வயதுதான் வாலிபம். என்றாலும், மனசை கொக்கி போட்டு இழுப்பதில் முக்கியமானது எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பது.

காதலை சொல்வதில், காதல் உரையாடலில் சினிமா வசனங்கள் அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. ஒவ்வொரு காதலிலும் சினிமா வார்த்தை ஒன்றாவது பேசப்பட்டிருக்கும். சினிமா நாயகர்களாகவும், நாயகிகளாகவும் காதலர்கள் தம்மை கற்பனை செய்து கொள்ளும்போது வசனங்களிற்கு மட்டும் எங்கு போவதாம்.

தமிழ் சினிமாவிலிருந்து காதலர்கள் உருவியெடுத்து அதிகம் பாவிக்கும் வசனங்களின் பட்டியலிது.

**'ஹாய் மாலினி.. ஐயாம் கிருஸ்ணன். நான் இத சொல்லியே ஆகணும். ஏன்னா நீ அவ்ளோ அழகு. இவ்ளவு அழக பார்த்திருக்க மாட்டாங்க'**

'வாரணம் ஆயிரம்' சூர்யாக்களாக மாறி இன்றைய இளம் காதலர்கள் பெரும்பாலும் பாவிக்கிறார்கள். ஊரில் திரியும் அனிதாவையோ, புனிதாவையோ 'ஹாய் மாலினி' என்று கூப்பிட்டுத்தான் கலாய்க்கவும் செய்கிறார்கள். இன்னும் சில கில்லாடி பையன்கள் மாலினி என்ற பெயரை எடுத்து, அந்த இடத்தில் ராகிணி, ரோகிணி என தமது ஆட்களின் பெயரை பாவித்து கவிழ்த்தும் விடுகிறார்கள்.

**'இத பாரு. நான் உன்னை லவ் பண்றன். நீயும் பண்ணிக்கோ'**

நடத்துனர் பஸ்ஸில் ரிக்கெட் எடுக்கச் சொல்வதைப் போல இப்படி மிரட்டி காரியம் பார்ப்பவர்கள் சிம்பு ரகம். ஒரு பெண்ணை மிரட்டி உருட்டி காதலை வர வைக்கலாமென நம்பும் 'பீப்'பையன்களின் தாரக மந்திரம் இது. பெண்களை காதலிக்க வைக்க என்ன வேண்டுமானாலும் செய்யும் ரகம் இவர்கள். கொஞ்சம் டேஞ்சரஸ் பார்ட்டிகள்!

**'என்னை மாதிரி பையன்களை பார்த்தாப் பிடிக்காது. பார்க்கப் பார்க்கத்தான் பிடிக்கும்'**

இப்படி சப்பை கட்டும் பையன்கள் ஏராளம். காதலைச் சொல்ல, அந்தப்பெண் குனிந்து செருப்பு பக்கம் பார்க்க, இந்த வசனத்தை சொல்லிவிட்டுத்தான் தப்பியோடுகிறார்கள். பெரும்பாலான பையன்கள் எப்பொழுதாவது இந்த வார்த்தையை பாவிப்பவர்கள்தான். சுமார் மூஞ்சி குமாருகளாக தம்மை நினைப்பவர்கள் இந்த வசனத்தை இதயத்தில் கல்வெட்டாக பொறித்தும் வைத்திருப்பார்கள். பெண்களால் ரசிக்கப்படும் வசனங்களில் இதுவும் ஒன்று என்கிறார்கள் இந்த விடயங்களில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள்.

**'ஒரு பெண்ணை பார்த்திட்டு இருந்தால் மட்டும் போதாது. அவ மனசில என்ன இருக்குதென்றதை புரிஞ்சிக்கணும்'**

என்ற 'சுப்ரமணியபுரம்' பட வசனத்தை கேட்காத 'முரளி'க்கள் இல்லையென்று சொல்லலாம். 'இதயம்' நாயகன் முரளி போல காதலைச் சொல்ல தயங்கி, பார்த்துக் கொண்டே இருக்கும் பையன்களிற்கு 'ரோசம்' வர பாவிக்கப்படும் வசனம். நம்மாட்களில் பாதிப்பேர் 'முரளி'க்கள்தான். அதனால் இப்படி வசனம் பேசி நிறைய நண்பர்கள் வெறுப்பேற்றியிருப்பார்கள்.




**'எனக்கு ஆள் இருக்கு பிரதர்'**

எத்தனை வருடங்கள் மாறினாலும் பெண்களின் 'எஸ்கேப்' ஆயுதமான பிரதர் தற்போது எடுத்துள்ள உருவம் இந்த வசனம். யாராவது பின்னால் சுற்றுகிறான், காதலைச் சொல்லியுள்ளான் என்றால் இப்படியொரு பதிலைத்தான் பெண்கள் சொல்கிறார்கள். யாரது என திருப்பி கேட்டால், 'அவுஸ்திரேலியாவில், அந்தாட்டிக்காவில்' என அடித்து விடுவார்கள். இப்படி சொல்லிக் கொண்டிருப்பவர்களிற்கு 'ஆபிரிக்காவில் கூட ஆள் இருக்காது' என்பதை பையன்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எப்பொழுதும் இதேவிதமாக சிந்திக்காமல் கொஞ்சம் யோசியுங்கள் பெண்களே!



1-ம் பக்க தொடர்ச்சி


பல்வேறு விடயங்கள் தொடர்பாக எம்முடன் மனம் திறந்து பேசியுள்ளார்.

**தீபம்: தமிழ்தேசிய கூட்டமைப்பு, சிறிசேன அரசு. இரண்டையும் நீங்கள் தேர்தல் சமயத்தில் கேள்விக்கிடமின்றி ஆதரித்தீர்கள். ஆட்சிமாற்றம் நிகழ்ந்து ஒருவருடத்தை கடந்துவிட்டது. இந்த ஒருவருடம் உங்களிற்கு திருப்தியளிக்கிறதா?**

**சுரேந்திரன்:** கடந்த 08. 01. 2015 ஆம் ஆண்டில் நடந்த விடயம் இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் ஒரு திருப்பு முனையாகவே பார்க்க வேண்டும். ஏனெனில் இலங்கையர் தமிழர் சிங்களவர் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு ஒட்டுமொத்தமாக அராஜக சர்வாதிகார நேர்மையற்ற ஊழல் கொண்ட ஜனநாயகமற்ற துவேசம் கொண்ட ஒரு ஆட்சி முறையை தமது வாக்குப் பலத்தால் தோற்கடித்த சரித்திர முக்கியத்துவம் கொண்ட ஒரு தருணம்.



இதனால் இலங்கையில் நல்ல விடயங்கள் சில நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஜனநாயக வெளி உருவாக்கப் பட்டிருக்கிறது. பேச்சுத் சுதந்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. பத்திரிகைகள் தமது கருத்துக்களை பயமின்றி வெளிப் படுத்தக் கூடியதாகவுள்ளது. மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் இராணுவத்திற்கோ காவல் துறையினருக்கோ பயப்படாமல் மறியல் போராட்டங்கள் நடத்தக் கூடியதாகவுள்ளது. 19 ஆவதுதிருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு சுயாதீனமான பல ஜனநாயக கோட்பாடுகளுக்கு இணங்க இயங்கக் கூடிய அமைப்புகள் நடைமுறைப்படுத்தியுள்ளனர். மதபேதம் பிடித்தவர்களுக்குப் பயந்து இயங்கத் தேவையில்லாமல் போயுள்ளது.





சிறுபான்மை மதத்தவருக்கு சட்ட ஒழுங்கு முறைகள் முன்னைய ஆட்சியை விட திறமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தமிழர்களுடைய சில உடனடித் தேவைகள் பூர்த்தி செய்யும் நோக்குடன் சிலவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. குறிப்பாக இராணுவ அதிகாரிகளை பதவியில் இருந்து விலக்கி அரச பொது ஊழியர்களை ஆளுநர்களாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நியமித்துள்ளது. சில தனியார் காணிகளை அந்தந்த உரிமையாளர்களிடம் திரும்ப கையளித்துள்ளார்கள். சில அரசியல் கைதிகளை விடுவித்துள்ளார்கள். புலம்பெயர் அமைப்புகள் சிலவற்றையும் தனியார் சிலரையும் தடை செய்த பட்டியலில் இருந்து நீக்கியுள்ளார்கள். இவையெல்லாம் சிறியவைகள் ஆனாலும் ஒட்டு மொத்தத்தில் ஒரு நல்ல வழியாகவும் ஒரு முதற் படியா கவுமே உலகத் தமிழர் பேரவை பார்க் கிறது. இருந்தாலும் தேர்தல் விஞ்ஞாபனத் தில் கொடுத்த வாக்குகள் பல நிறைவேற்றப் படவில்லை. குறிப்பாக ஒரு வருடம் கடந்த நிலையிலும் இப்போது தான் அரசியல் யாப்பை மாற்றியமைத்து ஒரு அரசியல் தீர்வை கொண்டு வரும் முயற்சிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. நடந்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் சர்வதேசச் சட்ட மீறல்கள் தொடர்பான ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவின் பிரேரணை அமுல்படுத்துவதில் தாமதங்கள், சர்ச்சைகள் பல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக் கூறல் என்பது இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை.

பல்லாயிரம் ஏக்கர் காணிகளில் இன்னமும் பல்லாயிரக்கணக்கான இராணுவம் வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருக்கிறது. இக் காணிகள் தனியாருடைய காணிகள். அக் காணிகளின் சொந்தக்காரரர் இன்னமும் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள். பயங்கரவாத தடைச் சட்டம் இன்னமும் அமுலில் உள்ளது. ஆகவே சில நன்மைகளும் ஆனால் பல நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்களும் இருக்கின்றன.

**தீபம்: அண்மையில் இந்திய ஊடக மொன்றிற்கு வழங்கிய நேர்காணலில், இந்தியா புலம்பெயர் தமிழ் குழுக்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டுமென கோரியிருந்தீர்கள். உங்களை போன்ற புலம்பெயர் அமைப்புக்களால் இனப்பிரச்சனை தீர்வில் என்னவகையான பாத்திரத்தை வகிக்க முடியும்?**

**சுரேந்திரன்:** இனப்பிரச்சினையால் தான் பல தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேற நேர்ந்தது. அப்படியாக வெளியேறியவர்கள் தான் பெரும்பான்மையான புலம்பெயர்ந் தவர்கள். ஆகவே அவர்களுடைய அபிலாசை களையும் உள்வாங்க வேண்டியது தமிழர் அரசியல் பிரதிநிதிகளினதும் அரசாங்கத்தினதும் கடமை ஆகும். இலங்கையில் வசிப்பவர்கள் தான் வரும் அரசியல் தீர்வை முழுமையாக அனுபவிக்கப் போறவர்கள். எனவே அவர்கள் தான் வரும் அரசியல் தீர்வை ஆதரிப்பதா அல்லது நிராகரிப்பதா என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியவர்கள். புலத்தில் வாழ்பவர்கள் பல நாடுகளில் பல விதமான அரசியல் அமைப்புகளின் கீழ் வாழ்ந்த அனுபவம் கொண்டவர்கள்.

அந்தந்த அனுபவங்களின் அடிப்படையில் வரும் அரசியல் தீர்வைப் பற்றி கருத்துக் கூறி விவாதிக்க கூடியதாக இருக்கும் அதே வேளையில் அரசியல் தீர்வைப் பற்றி பேச்சுவார்த்தைகளிலும் பங்கேற்றக் கூடியதாக இருக்கும்.

**தீபம்: புலம்பெயர்தளத்தில் பல அபிப்பிராயங்களுடன், பல குழுக்கள் உள்ளன. இவையெல்லாம் கிட்டத்தட்ட ஒரேயளவிலான மக்கள் செல்வாக்கைத்தான் உடையன. இந்தக்குழுக்கள் ஒரே மேசையில் அமர்ந்து, ஒரே நிலைப்பாடெடுத்து, ஒரே நோக்கத்துடன் செயற்படும் வாய்ப்புக்கள் உள்ளதென நம்புகிறீர்களா?**

**சுரேந்திரன்:** மூலோபாய முறையின் அடிப்படையில் பார்க்கும் போது தமிழர் தரப்பில் களத்திலும் சரி புலத்திலும் சரி பலதரப்பட்ட நிலைப்பாடுகளை முன்வைப் பதும் அதன் அடிப்படையில் வாதிடுவதும் சில சமயங்களில் தமிழர் விடுதலை போராட்டத்தை வலுப்படுத்துவதாகவும் பார்க்கலாம். விரிவாகக் கூறினால் சிலர் மென்மையான போக்கையும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டும் சிலர் தீவிரமான போக்கை கையாழுவதும் ஒரு வகையில் வலுச்சேர்க்கும். புலம்பெயர்ந்து வாழும் மேற்கத்தைய நாடுகளில் முழுமையான பேச்சு சுதந்திரம் உள்ளது. எனவே 6 ஆம் திருத்தச் சட்டமோ அல்லது பயங்கரவாத தடைச் சட்டமோ என்றெல்லாம் பயப்படாது பிரிவினையையும் மாற்றுக் கருத்துக்களையும் பகிரக் கூடியதாகவுள்ளது.

**தீபம்: புதிய அரசு உலகத்தமிழர் பேரவை யுடன் தொடர்புகளை பேணவதாக செய்திகள் வந்திருக்கிறது. புதிய அரசியலமைப்பு சட்டம் தொடர்பில் ஏதாவது தகவலுள்ளதா? வடக்கு கிழக்கு இணைக்கப்படும் வாய்ப்புள்ளதா?**

**சுரேந்திரன்:** உலகத் தமிழர் பேரவை யுடன் அரசாங்கம் தொடர்பைப் பேணுவதை நீங்கள் செய்திகளில் மட்டும் கேட்டிருக்கத் தேவையில்லை. தொடர்பை பேணுவதான உண்மையை வெளிவிவகார அமைச்சர் இலங்கை நாடாளுமன்றத்திலேயே கூறியுள் ளார். புதிய அரசியல் யாப்பு விடயமாக பிரேரணையை இன்னமும் அரசாங்கம் நாடாளுமன்றிற்கு முன்மொழியவில்லை. எப்படி அதைப் பற்றியோ அல்லது அந்த பிரேரணையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானிக்கப்பட வேண்டிய வடக்கு கிழக்கு இணைப்பதா இல்லையா என்ற விடயத்தைப் பற்றியோ உலகத் தமிழர் பேரவை தகவல் கூறுவது?

**தீபம்: உலகத்தமிழர் பேரவையினர் இப்பொழுது இலங்கைக்குள் வரலாம். ஏன் அதற்கு தாமதிக்கிறீர்கள்? போரால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வு, மீள்கட்டமைப்பில் உலகத்தமிழர் பேரவையும் நேரடி பங்காற்றலாமே?**

**சுரேந்திரன்:** உலகத் தமிழர் பேரவையி னதும் பல அமைப்புகளினதும் தடை நீக்கப்பட்டுள்ளது. தான். ஆனாலும் தமிழர்களுடைய கோரிக்கைகள் பல நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளது. தமிழர்களுக்கு உள்ள ஒரு மிகப் பெரிய பலம் சர்வதேச அரசாங்கங்கள், ஊடகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் எமக்கு ஆதரவாக இருப்பதே. அந்தப் பலத்தை கட்டிக் காப்பது இலங்கையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் அமைப்புகளும் தான். அப்படியான வேலைத் திட்டங்களைச் செய்யும் அமைப்பான உலகத் தமிழர் பேரவை ஒரு தனியிடம் பெற்றுள்ளது. இலங்கையில் எமது கோரிக்கைகளுக்கான தீர்வு வரும் வாய்ப்பு கொண்ட ஒரு சூழலை அரசாங்கம் அமைக்குமே ஆயின், நிச்சயமாக இலங்கை வ்ருவோம். மறுவாழ்வு வேலைத் திட்டங்களில் பங்குகொள்வோம்.

**தீபம்: கடந்த தேர்தலில் ஆட்சிமாற்றத்திற்கு துணை நின்றீர்கள். தமிழ்தேசிய கூட்டமைப்பை வெற்றியடைய சொல்லி மக்களிடம் கோரிக்கை விடுத்தீர்கள். இப்பொழுது தாயக மக்களிற்கு உங்களிடமிருந்து ஏதாவது செய்தியுண்டா?**

**சுரேந்திரன்:** பொதுவாக எல்லா மக்களும் எதிர்பார்ப்பு கொண்டவர்கள். அதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்ப்பு கொண்டவர்களாக இருப்பது குறைகூற முடியாததொன்று. இருந்தாலும் 10 வருட காலமாக இருந்த அராஜக அரசு முறைகளை மாற்றியமைக்க காலமாகும் என்பது யதார்த்தம். அழுத்தம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு தான் இருப்போம். மக்களும் அழுத்தம் கொடுத்த படி தான் இருக்க வேண்டும். ஆனாலும் யதார்த்தம் அறிந்து, இப்படியான மாற்றங்களை நடைமுறைப்படுத்த காலமாகும், என்பதை அறிந்து எதிர்பார்ப்புகளை நடைமுறைக்கு சாத்தியமான முறையில் பொறுப்புணர்ச்சி யுடன் வெளிப்படுத்த வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்.



# வயதாகாத காதல்

பி.சியா
siya@deepam.lk







காதல் என்றால் இளமை, புதுமை, கொண்டாட்டமா? அதற்கப்பால் எதுவுமே இல்லையா?

நிறைய இருக்குதென்கிறார்கள் வயதானவர்கள். வாழ்க்கைக்கு முகவரி எழுதுவதென்னவோ முதுமையின் அன்னியோன்யம்தான். காதலின் முகம் வாலிபக்காதலென்றால், இதயம் முதுமைக்காதல்தான். அங்குதான் இதயங்களால் காதல் செய்கிறார்கள். வாழ்வின் எல்லையிலும் திகட்டாமல் காதல் செய்யும் சில ஜோடிகளை சந்தித்தோம்.

இன்றும் ஆறுதலும், நெருக்கமும் சற்றும் குறையாமல் காதலின் முகவரி எழுதிக் கொண்டிருக்கும் இரண்டு தம்பதிகளின் காதல் தருணம் இவை.

யாழ்ப்பாணம் இருபாலையிலுள்ளது சுந்தரலிங்கம் நவமணி தம்பதி. சுந்தரலிங்கத்திற்கு இப்பொழுது 82 வயது. நவமணிக்கு 72. காதலும், அன்பும் குறையாமல் இன்னுமிருக்கும் தம்பதியை உட்கார வைத்து பேசினோம்.

**நவமணி:** எங்கட கலியாணம் பேச்சு திருமணம்தான். நாங்கள் கலியாணம் செய்த பிறகு காதலிக்கிற தம்பதி. (வெட்கத்துடன் சிரிக்கிறார்)

எங்கட வாழ்க்கையில ஒருகுறையுமில்லை. ஐஞ்சு பிள்ளையள். அவையள்தான் எங்களை இப்ப பார்க்கினம். ஆனால் நாங்கள் சும்மாயிருக்கிறதில்லை. வீட்டுத்தோட்டம் செய்யிறம். எல்லா மரக்கறியும் இருக்குது. அதோடயே பொழுது போயிடும்.

திருமணம் முடிச்ச புதிசில எங்களுக்க சில சண்டையள் வந்ததுதான். இவர் கொஞ்சம் குடிப்பார். அதாலதான் சண்டை வரும். நான் கத்தினால் சத்தமில்லாமல் இருந்திடுவார். நானும் அப்படித்தான். அவர் பேசினால் ஒன்றும் சொல்லமாட்டன்.

யார் சண்டை போட்டாலும் ஈகோ பாராமல் கொஞ்ச நேரத்தில கதைச்சிடுவம். இவர் பேசினால், கொஞ்ச நேரத்தில வெளியால போய் வருவார். போய் வந்தால் உடனே கதைப்பார். (கணவரை பார்த்து சிரிக்கிறார்)

**சுந்தரலிங்கம்:** வாழ்க்கையென்றால் கொஞ்சம் முன்னபின்ன இருக்கும் தான். நாம்தான் அனுசரிச்சு வாழ வேணும். என்னயிருந்தாலும் பிள்ளைகள் வளர்ந்ததுக்கு பிறகு நாங்கள் சண்டை பிடிக்கிறதில்லை.



இப்ப இவவுக்கு சமையல் உதவியெல்லாம் செய்யிறனான். மீன்வெட்டி குடுப்பன்.

(இடைமறித்த நவமணி)

**நவமணி:** கலியாணம் செய்த புதிசில தியேட்டருக்கெல்லாம் கூட்டிற்று போவார். இப்ப ஒரு இடமும் கூட்டிக் கொண்டு போறதில்லை. (சுந்தரலிங்கம் அப்பாவியாக சிரித்துக் கொண்டு இருக்கிறார்)

இளைய தலைமுறைக்கு உங்கள் ஆலோசனை என்னவென கேட்டபோது, 'ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ வேணும். ஈ.கோவை தூக்கியெறியுங்கள். இதை செய்தாலே வாழ்க்கையில் காதல் மணம் வீசும்' என்றார்கள் கோரஸாக.

யாழ்ப்பாணம் உடுவிலில் வசிக்கிறார்கள் சுந்தரம்தனலட்சுமி தம்பதியினர். சுந்தரத்திற்கு 85 வயதாகிவிட்டது. தனலட்சுமிக்கு 82. வீட்டில் தனிமையில் வசித்தாலும், ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவும், ஆறுதலாகவும் இருக்கிறார்கள். விடயத்தை சொன்னதுமே, 'நாங்கள் பேசித்தான் கலியாணம் செய்தனாங்கள். இந்த காதல் என்றதை கலியாணத்துக்கு பிறகுதான் செய்யிறம்' என சிரித்தார்கள்.

**சுந்தரம்:** கலியாணத்திற்கு பிறகு மனைவி, பிள்ளைகளிற்கு ஒரு குறையும் விடயில்லை. எங்களுக்கு ஒன்பது பிள்ளையள். என்ன கஸ்ரம் வந்தாலும் சகித்து கொள்ளுவம். ஒரு பிள்ளை தவறிப் போனதுதான் இன்றுவரை வருத்தமாக உள்ளது.

கலியாணம் செய்த புதிசில சமைச்ச அதே சுவையோட இப்பவும் சமைப்பா. ஆம்பிளை பிள்ளையளுக்கும் காணி குடுத்துத்தான் கலியாணம் செய்தனான். இப்ப எல்லோரும் நன்றாக இருக்கினம். தங்களோட வந்திருக்க சொல்லுகினம். ஆனால் நான் உழைச்சு மனிசியை காப்பாற்றுவன். இப்ப ஆட்டோ வைச்சிருக்கிறன். அயல் சனங்களெல்லோரும் என்னைத்தான் பிடிப்பினம்.

அவவிற்கு இப்ப நாரி வருத்தம். உடுப்புகள் தோய்க்க மாட்டா. அவவின்ர உடுப்பையும் நான்தான் தோய்க்கிறன். மேல போறதென்றாலும் எனக்கு முதல் அவ போயிட வேணும். அவவை தனிய விட்டிட்டு போக விரும்பயில்லை (கண்கலங்கினார்)





## ஐஸ்வர்யாவின் புதுப்படம்

புதுமுகம் சுரேஸ் நடிக்கும் படம் 'மோ'. இதில் நாயகியாகிறார் ஐஸ்வர்யா ராஜேஷ். படத்தை இயக்குபவர் புவன் நல்லான் ஆர். படத்தின் பெரும்பாலான பணிகள் முடிந்துவிட்டன. பொஸ்ற் புரடக்ஷன் பணிகள் நடக்கிறதென்கிறது படக்குழு. ஐஸ்வர்யா இதுவரை வாங்கிய பெயரை இந்தப்படமும் காப்பாற்றும் என்கிறார் இயக்குனர். நகைச்சுவை கலந்த திகில் படம் என்கிறார்கள்.

## ஜோடியில்லாத சித்தார்த்

சித்தார்த்தே தயாரித்து நடிக்கும் படம் 'ஜில் ஜங் ஜக்' ஜம்புலிங்கம், ஜக்குவார், ஜகன் என்ற மூன்று பெயர்களின் சுருக்கம்தானாம் படப்பெயர். இந்தப் பெயரை வைத்தால் வரிவிலக்கு கிடைக்காதென்பது தெரியும். இதனால் விண்ணப்பிக்கவுமில்லை என்கிறார் சித்தார்த். 'இந்தப்படத்தின் மூலம் எந்தவொரு செய்தியும் கிடையாது. ஆனால் சிரிப்பிற்கு உத்தரவாதம் வழங்க முடியும் என்கிறார் சித்தார்த். இந்தப்படத்தில் நாயகி இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.



## ஸ்கோர் செய்யும் வரலட்சுமி

அர்ஜூன் நடிப்பில் 'நிபுணன்' உருவாகி வருகிறது. நாயகி வரலட்சுமி. தாரைதப்பட்டையில் நடித்துக் கொண்டிருந்தபோதே புக் செய்து விட்டனராம். படம் வெளியான பின்னர் வரலட்சுமி ஸ்கோர் செய்யும் விதமான சில காட்சிகளை இணைத்துள்ளார்களாம். காரணம், தாரைதப்பட்டையில் அவரது நடிப்பு. வரலட்சுமிக்குஇந்தப்படமும் பெயர் வாங்கிக் கொடுக்கும் என்கிறார்கள். அத்துடன் அர்ஜூனும் வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறாராம். அதை இறுதிவரை ரகசியமாக வைத்திருக்கவே படக்குழு விரும்புகிறது.

## மிரளும் விஜய்சேதுபதி

'காதலும் கடந்து போகும்' படத்தில் விஜய்சேதுபதி ஜோடி பிரேமம் மடோனா. மடோனாவின் நடிப்பை வாய்நிறைய புகழ்ந்துள்ளார் சேதுபதி. 'பிரேமம் படத்தில் நன்றாக நடித்திருந்தார். இதில் அதையெல்லாம் விட சிறப்பாக நடித்துள்ளார். அவருடன் நடிப்பது சவாலானது. நடிப்பு ராட்சஸி' என புகழ்ந்துள்ளார். தன்னுடன் நடிக்கும் நாயகிகளின் நடிப்பு நன்றாக இருந்தால் வெகுவாக பாராட்டுவதில் விஜய் சேதுபதி பின்நிற்பதில்லை. ஏற்கனவே காயத்திரி, ரம்யா நபீசன் போன்றவர்களையும்அவர் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

## சாந்தினியின் கவர்ச்சி

கே.பாக்கியராஜ் இயக்கிய சித்து ப்ளஸ் 2 படத்தில் நாயகி சாந்தினி. பின்னர் ஒரு படம் நடித்தார். அவ்வளவுதான். ஆளை காணவுமில்லை. தெலுங்கில் சில படங்கள் நடித்தார். திடீரென இப்பொழுது தமிழில் நான்கு படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். சூட்டிங் இடைவெளியில் அவரை வளைத்துப் பிடித்தோம். 'சென்னை பெண்ணான எனக்கு தமிழில் முன்னணி நாயகியாக விரும்பம் இருக்காதா. ஆனால் முதல்படம் நன்றாக போகவில்லை. வாய்ப்பில்லையென்பதற்காக ஓவர் கவர்ச்சிக்கு நான் தயாரில்லை. சில சமயம் அட்ஜஸ்ட் செய்து, பாடல் காட்சிகளில் மிதமான கிளாமரில் நடிக்கிறேன். பணத்திற்காக கிளாமரில் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லை' என்கிறார்.

# டூரிங் டாக்கீஸ்



## காரணமின்றி தோரணம் ஆடாது!

ரகுல் பிரீத் சிங் தொடர்பான சர்ச்சையொன்று அண்மையில் கிளம்பியது. தெலுங்குப்படமொன்றிற்கு கால்சீட் வழங்கிவிட்டு, பின்னர் படத்திலிருந்து விலகி விட்டார் எனப்பட்டது. இதை ஆளாளுக்கு கண்டிக்க விடயம் சூடு பிடித்தது. என்ன ஏதென ரகுலையே பிடித்து கேட்டோம். அம்மணி விபரமாக பேசினார். 'நான் மறுத்தால் நியாயமான காரணம் இருக்கும்' என ஒற்றை வரியில் எல்லாவற்றையும் அடக்கினார். 'வரும் வாய்ப்புக்களிலெல்லாம் நடிக்க விருப்பம்தான். ஆனால் வருடத்தில் இருப்பது 365 நாட்கள் மட்டும்தானே. சில சமயம் கால்சீட்டை அட்ஜஸ்ட் செய்து நடிக்கலாம். முடியாதென மறுத்தால் அதற்கு பின்னால் வலுவான காரணங்களிருக்கும்' என்றார் தெளிவாக.


## குண்டான குத்துவிளக்கு

இளசுகளின் கனவில் மெல்லமெல்ல புகத் தொடங்கிய போதே நஸ்ரியா பஹத்பசில் வீட்டில் குத்துவிளக்கேற்றிவிட்டார். ரசிகர்கள் பலருக்கு இதனால் எழுந்த கோபம் இன்னும் அடங்கவில்லை. நஸ்ரியா என்றாலே 'நச்' தோற்றம்தான் நினைவுக்கு வரும். அப்படியிருந்த நஸ்ரியா இப்படியாகிவிட்டாரே என பார்ப்பவர்கள் உச்சுக்கொட்டும் விதமாக இப்பொழுது உப்பிவிட்டார். இந்தப்படங்கள் இணையத்தில் வெளியானதையடுத்து பலரும் கிண்டலடித்தபடியுள்ளனர். அண்மையில் நிகழ்ச்சியொன்றிற்கு பஹத் நஸ்ரியா ஜோடி வந்தபோது, 'உப்பல்' விவகாரத்தை ஒரு செய்தியாளர் கேட்டிருக்கிறார். அதற்க பஹத் கொடுத்த நெற்றியடி இது 'என் மனைவி குண்டானால் அவர்களிற்கு என்ன?'



## நான் இன்னும் பிகர்தான் மச்சி!

'முன்னர் 93 கிலோ எடையுடன் இருந்தேன். டயர்ட், பயிற்சி என்பவற்றால் இப்போது எழுபது கிலோவாகிவிட்டேன். இன்னும் 5 கிலோ குறைக்கும் உத்தேசமுள்ளது' என கண்சிமிட்டுகிறார் சூரத் சூறாவளி நமீதா. ஐந்து வருடங்களின் பின்னர் தமிழில் நடிக்கிறார். இந்தப்படத்திற்காகத்தான் இந்தமெலிவு. அதுதவிர, பாத்திரத்திற்காக சற்று கறுக்கவும் போகிறாராம். மெலிந்த, கறுத்த நமீதாவை ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா என கேட்டால், 'எப்படியிருந்தாலும் நான் கிளாமர் குயின்தான்' என்கிறார் அம்மணி. இனிமேல் கவர்ச்சிக□□ரீக்கு முன்னுரிமை கொடுக்காமல் கதைக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப் போகிறேன் என்றார். இதைக் கேட்டு நாம் நெஞ்சு படபடத்தபோது, 'கதைக்கு தேவையென்றால் கிளாமராக நடிப்பேன்' என ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தார்.



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



# இலங்கையில் தேங்காய் சிரட்டைக்கரி, ஏவப்பட்டகாபன் கைத்தொழில்

## (Charcoal, Activated Carbon Industry)



இரண்டு சகாப்தங்களுக்கு முன்பாக இலங்கையிலிருந்து பெருமளவிலான தேங்காய் சிரட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது. தேங்காய் சிரட்டை, ஏவப்பட்ட காபன் கைத்தொழிலைப் பெறுத்தவரையில் உலகளாவிய ரீதியில் 2ஆவது இடத்தை இலங்கை வகிக்கின்றது.

தேங்காய் சிரட்டைக்கரி உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய முறைப்படி சேகரிக்கப்பட்ட தேங்காய் சிரட்டைகளானது மண்ணில் தோண்டப்பட்ட குழியில் இடப்பட்டு பகுதித்தகனம் செய்யப்படும். இச் செயன்முறையின் போது வெளியிடப்படும் வாயுக்கள் மனிதனால் சுவாசிக்கப்படும் போது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதால் இக் கைத்தொழிலானது மக்கள் வசிக்கும் இடங்களிலிருந்து தூர இடங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதை தவிர்க்கும் முகமாக தற்போது இயந்திரங்கள் மூலம் தேங்காய் சிரட்டை எரிக்கப்பட்டு சிரட்டைக்கரிபெறும்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இம் முறைகளால் சூழல் மாசடைதலானது மிகவும் குறைக்கப்பட்டு வெளிவிடப்படும். வாயுக்களின் பகுதி பயனுள்ள முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெட்ரிக்தொன் தேங்காய் சிரட்டைக்கரி உற்பத்தி செய்வதற்கு 20,000 சிரட்டைகள் அவசியமாகும். சூழலைப் பாதுகாக்கும் ஏவப்பட்ட காபன் வகைகளில் மிகவும் தூய காபன் வகை தேங்காய்ச் சிரட்டையிலிருந்து பெறப்பட்டதாகும்.

இயந்திர முறைகளில் சரியான முறைகளில் தகனம் செய்யப்படும் போது தேங்காய் சிரட்டையில் காணப்படும் மூலப்பொருட்களான ஐதரசன், நைதரசன் போன்றவை வெளியேற்றப்படும். இப்படி இம் மூலப்பொருட்கள் வெளியேற்றப்படுவதால் உண்டாகும் இடைவெளிகளால் வேறு பதார்த்தங்கள், பொருட்கள் உறிஞ்சப்படக் கூடிய தன்மை காணப்படும். இப்படியாக வேறு பதார்த்தங்களை வைத்திருக்கக் கூடிய தன்மைக்கு தேங்காய் சிரட்டையை மாற்றுதலே, சிரட்டைக்கரி ஏவப்படுதல் எனப்படும்.

அதனால் அகப்புறமாக உருவாக்கப்படும் நுண்துளைகளைக் கொண்ட காபன் பதார்த்தமானது ஏவப்பட்ட காபன் (Activated carbon) எனப்படும். நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட பல ஏவப்பட்ட காபன் தொழிற்சாலைகள் தற்போது இலங்கையில் காணப்படுகின்றன.

### ஊக்குவிக்கப்பட்ட காபன் தயாரிப்பு முறை.

சிரட்டையில் இருந்து தயாரிக்கப்பட்ட சிரட்டைக்கரியினை சுழலும் உலர்த்தியில் (kiln) இட்டு நீராவி மூலம் $900^0$C $1100^0$C வரை கட்டுப்பாடான சூழ்நிலையில் சூடுபடுத்தப்படும். அப்போது சிரட்டைக்கரிக்கும் நீராவிக்கும் இடையேயான செயற்பாடுகள் கரியில் கூடுதல் உறிஞ்சும் உட்பரப்பளவினை உருவாக்குகின்றது. வெப்பநிலை $900^0$C க்கு கீழே சென்றால் செயற்பாடுகள் மிகத் தாமதம் ஆகவும், $1100^0$C க்கு அதிகமானால் செயற்பாடுகள் வெளிப்பரப்பில் ஏற்பட்டு நிறைய கரி வீணாக வாய்ப்புள்ளது.

ஊக்குவிக்கப்பட்ட காபனின் பயன்பாடுகள் (Activated Carbon)

- குளிரூட்டலில் பயன்படுத்தப்படும் வாயுக்கள், வேறு வாயுக்கள் சம்பந்தப்பட்ட தொழிற்பாடுகள்.
- இரசத்திரவத்தை அகற்றல், புகைப்படங்கள் பிரதி எடுத்தலில், அச்சிடலில் இரசாயன தொழிற்பாடு சம்பந்தமாக.
- குளிர்பானங்கள் தயாரிக்கப்படும் நீரில் உள்ள குளோரினை அகற்றுதல்.
- பழரசம், வைன் போன்றவற்றை தயாரிக்கும் கைத்தொழில்.
- மருந்துப் பொருட்கள் உற்பத்தி.
- பொன் உற்பத்தி.
- மின்சாரகலன்கள், அணுசக்தி போன்றவற்றைப் பயன்படுத்தல்.
- கைத்தொழில்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்களையும், கழிவுகளையும் அகற்றி சூழலைப் பேணல்.

### நீர் சுத்திகரிப்பு.

ஒரு மெட்ரிக் தொன் சிரட்டைக்கரி ஏவப்பட்ட காபன் தயாரிக்க 3.3 மெட்ரிக்தொன் தேங்காய் சிரட்டைக்கரி 65,000 சிரட்டைகள் தேவைப்படும். தற்போது ஒரு மெட்ரிக்தொன் தேங்காய் சிரட்டை ஏவப்பட்ட காபனானது 1100 அமெரிக்க டொலருக்கு விற்கப்படும்.

மூலப்பொருட்களின் தர நிர்ணயம், உற்பத்தியின் தரக்கட்டுப்பாடு போன்றவற்றைக் கருத்தில் கொள்ளும் போது வியாபாரம் சம்பந்தமாக பாவிக்கப்படும் தேங்காய் சிரட்டைக்கரி பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

மூலப்பொருட்களின் தரக் கட்டுப்பாடு சம்பந்தமான நிர்ணயங்கள்.

- ஆவியாகக்கூடிய பதார்த்தம் - 15% மேற்படாமல்.
- ஈரப்பதன் - 10% மேற்படாமல்.
- சாம்பல் - 02% மேற்படாமல்.
- நிலை நிறுத்தப்பட்ட காபன் - 05% மேற்படாமல்.
- துணிக்கைகளின் பருமன் - 05% மேற்படாமல்.

இறுதித் தயாரிப்பின் தரமானது பின்வரும் தன்மைகளில் தங்கியிருக்கும்.

1. தொழிற்பாடு
2. கடினம்
3. துணிக்கைகளின் அளவு
4. திண்ம அடர்த்தி

20 அடி கொள்கலனில் 15 மெட்ரிக்தொன் தேங்காய்ச் சிரட்டை கரியும், 40 அடி கொள்கலனில் 80 மெட்ரிக்தொன் தேங்காய்ச் சிரட்டை கரியும் உள்ளடக்கப்படலாம். இது வாயுக்கள் உட்புகாத பொலிபுரப்பலின் பைகளில் பொதி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும்.

தற்போது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஏவப்பட்ட காபனின் தேவையானது வருடத்திற்கு 1015% வரை வளர்ச்சியடைந்துள்ளது. இதனால் தெங்கு கைத்தொழில் பெறுமதி அளிக்கப்பட்ட பொருளாக இது கருதப்பட்டு இக் கைத்தொழிலின் தரமும் உற்பத்தியின் அளவும் மேலும் அதிகரிப்பதன் மூலம் அதி கூடிய பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையிலிருந்து தேங்காய்ச் சிரட்டைக் கரியானது பிரான்ஸ், யப்பான், நெதர்லாந்து, மலேசியா, போன்ற நாடுகளுக்கும் தேங்காய் சிரட்டைக்கரி ஏவப்பட்ட காபனானது ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராட்சியம், தென்னாபிரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

தற்போது இலங்கையில் தேங்காய் உற்பத்தி வருடம் ஒன்றுக்கு 2500-3000 மில்லியன் வரை காணப்படுகின்றது. இதிலிருந்து பெறப்படும் பக்க விளைபொருளாக தேங்காய் சிரட்டை பெருமளவில் (75 சதவீதம் வரை) வீணாக்கப்படுகின்றது. இதனால் கிராமங்களிலும், நகரங்களிலும் தேங்காய் சிரட்டை சேமிக்கும் திட்டம் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### தேங்காய் சிரட்டைக்கரி (Charcoal)

தேங்காய் பொச்சுமட்டையினை உரித்த பின்பு, கிடைக்கின்ற கடினமான ஓடு போன்ற பகுதி "சிரட்டை" என்றும் இந்தியாவில் தமிழகத்தில் "கொட்டாங்கச்சி" அல்லது "தொட்டி" என்றும் அழைக்கப்படும்.

### சிரட்டையின் உள் காணப்படும் பொருட்கள்

- ஈரப்பதம்: 8.0%
- எண்ணெய்: 42%
- நைதரசன்: 0.11%
- செலுலோஸ்: 26.6%
- லிக்னின்: 29.4%
- பென்டாசான்ஸ்: 27.7%
- சாம்பல்: 0.6%
- யூராணிக் அன் ஹெட்ரேட்: 3.5%
- மீத்தாக்ஸில்: 5.6%

### சிரட்டையில் இருந்து பெறும் பொருட்கள்

- சிரட்டைத்தூள்
- ஊக்குவிக்கப்பட்ட காபன்
- சிரட்டை எண்ணெய்
- சிரட்டை கைவினைப் பொருட்கள்
- ஐஸ்கிறீம் கோப்பையாக பாவிக்கலாம்.

**குறிப்பு:** தேங்காய் சிரட்டைக்கரி, மாசுபொருட்களை அகற்றல், நீர்சுத்திகரிப்பு, எரிபொருள், வாயுசுத்திகரிப்பு, மருந்து வகை, என்பவற்றிற்கு இது பயன்படுகின்றது.

### சிரட்டைத்தூள் பயன்பாடு.

நன்கு முற்றிய சிரட்டையிலிருந்து சிரட்டைத்தூள் தயாரிக்கப்படுகின்றது.

- இத்தூள் பிளைவூட்லெமினேசன், கொசுவர்த்திசுருள், அகர்பத்தி தயாரிப்பதற்கு உதவும்.
- கூடுதல் நீர் உறிஞ்சும் தன்மையும், பங்கசு தாக்குதலினை எதிர்க்கும் சக்தியும் உள்ளது.
- சிரட்டையிலுள்ள நாரினை முழுமையாக அகற்றிய பின்பு, சிறுசிறு துகள்களாக உடைத்து கிரைண்டரில் இட வேண்டும். கிரைண்டரில் கிடைக்கின்ற துகளினைப் பெற்று சல்லடையில் இட்டு சிரட்டைத்தூளை எடுக்கலாம்.
- சிரட்டையினை காற்று குறைவாகக் கிடைக்கும் படி செய்து எரித்தால் சாம்பலாகாது கரியாக எடுக்கலாம்.
- நல்ல தரமான சிரட்டைக்கரி, நல்ல பளிச்சிடும் கருமை நிறத்துடனும், தரையில் போட்டால் ஒருவித சத்தம் எழுப்பக்கூடியதாகவும் இருக்கும்.
- அதிகமான அளவில் வெந்த சிரட்டையினை அழுத்தினால் உடைந்து விடும்.

# சும்மா இருக்கச் சோறு வருமா?



கார்த்திகா
sukuna.k@gmail.com

தற்போது மனிதனது அடிப்படைத் தேவைகள், பொருட்களின் விலைவாசி என்பன அதிகரித்துக் காணப்படுவதால் பணத்தின் தேவையும் அதிகரித்துள்ளது. குடும்பத்தில் கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் சென்றால்தான் நிறைவான வாழ்க்கையை வாழ முடியும் என்ற நிலையாகிவிட்டது. நிலைமை இவ்வாறிருக்கு குடும்பத்தைச் சுமக்கவேண்டிய தலைவன் இல்லை என்றாலோ, வேலைக்குச் செல்ல முடியவில்லை என்றாலோ அந்தக் குடும்பத்தின் நிலை என்னவாக இருக்கும்???? அந்த சமயத்திலதான் குடும்பப் பாரத்தை யாரோ ஒருவர் சுமக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மண்டையைப் பிளக்கும் உச்சி வெயில். நெற்றியில் வடிந்தோடும் வியர்வையை அடிக்கடி கையால் வழித்து வீசியவாறு, வெயிலின் கீற்றைத் தணிக்க ஆடைகளுக்கு மேல் முழு நீளக் கையுடைய சேட் அணிந்து, தலையை துணியால் மூடியவாறு மூன்று பெண்கள் கையில் மண்வெட்டிகளுடன் ஏ32 (காலீப்பெற்) வீதியின் அருகில் உள்ள புற்களை செருக்கிக் கொண்டிருந்தனர். ஆடைகள் வியர்வையால் நனைகின்றன. அருகில் ஐந்து லீற்றர் பிளாஸ்ரிக் போத்தலில் தண்ணீர். வெயிலால் நா வறண்டு போக இடையிடையே அதனைப் பருகியவாறே மண்வெட்டியைப் பிடிக்கின்றனர்.

வேலணை, அல்லைப்பிட்டி, புளியங் கூடல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெயர்கூற விரும்பாத இந்தக் பெண்களில் இருவர் கணவனால் கைவிடப்பட்டவர்கள், மற்றொருவருடைய கணவர் நோய்வாய்ப் பட்டுள்ளதால் வேலைக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளாராம். குடும்ப வறுமையப் போக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டும் இவர்கள் மூவரும் குடும்பச் சுமையை தங்கள் தோள்களில் சுமக்கின்றனர்.

சுமார் இரண்டறை வருடங்களாக மெகா பொறியியல் நிறுவனத்தில் கூலித் தொழிலாளர்களாகப் பணியாற்றும் இவர்கள் இதற்கு முன்னர், தோட்ட வேலை, வீட்டு வேலைகள், பண்ணை வேலைகள் என கிடைக்கும் வேலைகளுக்குச் சென்று அதில் கிடைக்கும் வருமானத்தில் அடிப்படைச் செலவு மற்றும் பிள்ளைகளின் கல்விக்கான செலவுகளையும் பார்த்து வந்ததாகவும், தற்போது மெகா நிறுவனத்தில் பணியாற்றுவதன் மூலம் மாதம் ஒன்றுக்கு 22,000 தொடக்கம் 25,000 வரை வருமானமீட்டுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். காலையில் எட்டு மணிக்கு வேலைக்கு வரும் இவர்கள் மாலை 5 மணிக்கு வீடு திரும்புகின்றனர்.

"வெயிலுக்குள்ள நிண்டு வேலை செய்யிறதால தலை வலிக்கும். காய்ந்த கற்தரை என்டா மணவெட்டி சறுக்கி கால்களிலும் படும். புல்லுகளை குனிஞ்சு, குனிஞ்சு கொத்;துறதால கால், கை இடுப்பு எல்லாம் பயங்கரமா வலிக்கும். இரவில் தூங்கவே முடியாது. என்ன செய்ய நாங்கள் கஷ்ரப்பட்டால்தான் எங்கட குடும்பம் சந்தோசமா இருக்கும். சும்மா இருந்தா சோறு யார் தருவார்கள். எங்கள் கைதான் எப்போதும் எங்களுக்கு உதவி" என்கின்றனர் அவர்கள்.

### 4 வருடங்களாக குடும்பத்தை சுமக்கிறேன்

"எனக்கு இரண்டு பிள்ளைகள். மூத்த மகள் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கிறார். இரண்டாவது மகன் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கிறார். இரண்டாது மகனுக்கு இரண்டு வயதாக இருக்கும் போதே கணவருக்கு வலிப்பு நோய் வரத் தொடங்கி விட்டதால். வேலைகளுக்கு அவரால் செல்ல முடியவில்லை. அன்றுமுதல் 14 வருடங்களாக குடும்பப் பொறுப்பை நான்தான் சுமக்கிறேன்" என்றார் மூன்று பெண்களில் ஒருவரான 45 வயது மதிக்கத்தக்க பெண்.

### கௌரவம் செய்யும் தொழிலில் இல்லை

"றோட்டில நின்டு வேலை செய்யிறிங்களே ஒரு மாதிரி இல்லையா என எங்கட ஊரில பலபேர் என்னை கேட்டாங்க. என்னைப் பொறுத்தவரையில் இந்தத் தொழிலை கௌரவக் குறைச்சலாக நினைக்கேல. அடுத்தவர்களை ஏமாற்றி வாழாமால் நேர்மையா உழைச்சு சாப்பிட்டாலே போதும். கௌரவம் என்றது செய்யிற தொழிலில் இல்லை. நடத்தையில்தான் உள்ளது" என்றார் மற்றொரு பெண்.



கணவன், பிள்ளைகளை கவனிப்பது, சமையல் என்றிருந்த காலம் போய் இன்று பெண்கள் எல்லோரும் ஆண்களுக்கு நிகராக செயற்பட்டு வருகின்றனர். பெண்களால் முடியாததென்று எதுவும் இல்லை. இதற்கு இந்த மூன்று பெண்களும் ஓர் உதாரணம்.






மன்னார் எமில்நகர மக்களிற்கு பொலிசார் விழிப்புணர்வு கருத்தரங்கொன்றை நடத்தியுள்ளனர். கொலை, கொள்ளை உள்ளிட்ட அசம்பாவிதங்களிலிருந்து மக்கள் தற்காத்து கொள்ளும் வழிமுறைகள் பற்றி அறிவூட்டப்பட்டுள்ளது.





மட்டக்களப்பின் மண்டூர் சங்கர்புர கிராமத்தில் நீண்டகால இடைவெளியின் பின்னர் அறுவடை நிகழ்வு நடந்துள்ளது. சில பொதுஅமைப்புக்கள் மற்றும் விவசாயிகளின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்விற்கு ஹற்றன் நசனல் வங்கி அனுசரணை வழங்கியிருந்தது.





# “படிக்கட்டுமலை”யின் புதையல் இரகசியம்

சுட்டு
chuddu.deepam@gmail.com

அக்காலத்தில் கருங்கல் மலைகள் பல ஜீவராசிகளுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் புகலிடமாக இருந்ததுடன், பண்டைய மன்னர்கள் மற்றும் பெரும் செல்வந்தர்கள் தமது சொத்துக்களை பதுக்கி வைக்கும் பாது காப்பு அரணாகவும் இருந்து வந்தது. இவ்வாறு மறைத்து வைக்கப்பட்ட செல்வங்களை தோண்டி எடுத்த சிலர் செல்வந்தர் ஆகியுள்ளனர். பலர் கம்பி எண்ணுகின்றனர்.

புதையல் தோண்டுவது சட்டவிரோத மானது. இருந்தும் ஆசை யாரைத்தான் விட்டது. புதையல் தோண்டுவதை நிறுத்தின பாடில்லை. இதனை பறைசாற்றுகிறது வவுனியாவில் உள்ள “படிக்கட்டு மலை”

காட்டு மரங்களின் நடுவே உள்ள இந்த மலையில், லாவாக் குளம்புகள் கக்கப்பட்டு இறுகிப்போன கருங்கல் மலைகள், தொடராக சிறு குன்றுகள் என்பன அமைந்துள்ளதால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வவுனியா மண் ஓர் எரிமலைவலயமாகஇருந்தி ருக்குமோ? என பார்ப்பவர்களை சிந்திக்கத் தூண்டுகிறது. அதுமட்டுமல்ல “படிக்கட்டு மலை”யில் உள்ள கல்மலைகளுக்கு இடையில் புதையல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

உண்மைதானா? அறிந்துகொள்ளும் ஆவலுடன், பரம்பரை வழியாக புதையல் பற்றி நன்கு தெரிந்த ஜெகேஸ் என்பவரின் உதவியுடன் படிக்கட்டு மலைக்குச் சென் றோம். புதையல் தோண்டப்பட்ட குளிகள், மலையில் வெடிப்புக்கள், பாம்பு உருவங்கள், குளிகைகள், படிக்கட்டுகள், நேர் கோடுகள் என்பன காணப்பட்டன.

**புதையலும், காவலும்**

இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் எல்லாளன் கி.மு 145இல் இருந்து கி.மு 101 வரை அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த காலப் பகுதியில், குறு நில மன்னனான எல்லப்ப மகாராஜன் தனது செல்வங்களில் பெரும் தொகுதியை கருங்கல் மலைகளில் பல இடங்களில் புதைத்து வைத்ததாகவும், புதைத்த இடத்தை இனங்காண கருங்கல் மலையில் குறியீடுகளும், வடிவங்களும் செதுக்கப்பட்டதாகவும் கூறிய ஜெகேஸ், மாலை நேரச் சூரியன் மறைந்து கொண்டிருக்கும் அந்நேரம் புதர்களைத் தள்ளிக்கொண்டு கொட்டிக்கிடந்த சருகு களை தட்டி ஓர் பாம்பு உருவத்தைக் காட்டினார்.

நெளிந்து கிடக்கும் சிற்ப உருவத்தில் எத்தனை வளைவுகள் உள்ளதோ அத்தனை அடி, அதன் வாலின் நுணியில் இருந்து நடந்து போகக் குளி ஒன்று தென்பட்டது. அச்சு அசலாக ஆரை பிசகாமல் அமைக்கப்பட்ட அந்தக் குளிக்கு சற்றுத்தூரத்தில் இன்னுமொரு குளி. இரண்டு குளிகளுக்கும் மையத்தில் ஒரு நேர்கோடு. அந்தக்கோடு எங்கே முடிகிறதோ அதுதான் புதையல் இருக்குமிடமாம். ஆதற்கு மேல், புதையலை எவரோனும் எடுக்க முயற்சித்தால் தலைக்கு மேலே விழுந்து ஆளை நசுக்கிக் கொல்ல பல தொன் எடை கொண்ட கல் வைக்கப்பட்டுள்ளது. புதையல் காலுக்கு வைக்கப்பட்டுள்ள இந்தக் கல் “பொறிகல்” என அழைக்கப்படுகின்றது.

அத்தனை தொன் எடை கொண்ட கல் எப்படிக் கீழே விழும்? இது வெறும் கட்டுக் கதையாக இருக்குமோ என அந்தப் பொறிகல்லின் கீழே சென்று பார்த்தபோது தான் புரிந்தது அது கதையல்ல நிஜம் என. சரியான கணிப்புக்களின் படி இயற்கை யாகவே சாய்ந்து கிடந்த அந்தக் கல்லினை மேலே இருக்கும் பெரும் கல்லின் நுணியில்ப் பொருந்தும் விதமாக தேவையற்ற கற்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. சாய்ந்த கல்லின் அடிப்பகுதி வெட்டப்பட்டு புதைக்கப்பட்டி ருக்கிறது. அதற்குக் கிழேதான் புதையல் புதைக்கப்பட்டதாக தகவல். அந்தப் புதை யலை தோண்ட முயலும்போது வலுவற்ற அடிப்பகுதியின் சிதைவுகளால் சாய்வான கல் மேலும் சாய மேலே இருக்கும் பாரிய பாறை விளுந்து மூடிக்கொள்ளுமாம். இப்படி யாக இருக்கிறது எல்லப்ப ராஜனின் செக்யூருட்டி செட்டப்.

இப் புதையல் பேராபத்து நிறைந்த வேட்டை என்பதாலும். சட்டத்தின் பிடி இறுகி இருப்பதாலும் இதுவரை யாராலும் தோண்டப்படாமல் இருப்பதாக குறிப்பிட்ட ஜெகேஸ், படிக்கட்டு மலையைச் சூழவுள்ள இரண்டு பகுதியில் புதையல்கள் தோண்டப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிட்ட துடன், அதற்கான சான்றுகளாக புதையல் எடுக்கப்பட்ட இடங்களில் மனிதர்களால் சிதைக்கப்பட்ட பகுதிகளைக் காட்டினார்.

**மேலும் பல இடங்களில் புதையல்**

வவுனியா மாவட்டத்தில் இன்னும் பல இடங்களில் புதையல்கள் இருப்பதாக கூறிய ஜெகேஸ், பெருமளவு புதையல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

புராதன சின்னங்கள் அழிக்கப்படும் இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கின்ற போதும், புதையல் தோண்டும் எண்ணத்தை பலர் கைவிடவில்லை. புதையலை மறைத்து வதைத்தவர்களின் பரம்பரையினரும், புதயல் தோண்டுவதில் ஆர்வமுள்ளவர்களும் “நமது முன்னோர்கள் அவர்களது சொத்துக்களை யாருக்காக புதைத்து வைத்தனர்?? அவர்கள் பரம்பரைக்காகத்தானே?? எவருக்கு கிடைக் கனும்னு விதி இருக்கோ அவர் கைக்குப் போய்ச் சேரும்” எனும் குதர்க்கமான பதில் களையும், சாடல்களையும் முன்வைக்கின்றன ராம்.

இதனை தடுத்து நிறுத்துவதற்கு குறிப்பிட்ட பிரதேசங்களை தொல்லியல் பிரதேசமாக பிரகடனப்படுத்துவதே சிறந்த தீர்வாகும்.



புதையலை எவரோனும் எடுக்க முயற்சித்தால் தலைக்கு மேலே விழுந்து ஆளை நசுக்கிக் கொல்ல பல தொன் எடை கொண்ட கல் வைக்கப்பட்டுள்ளது. புதையல் காலுக்கு வைக்கப்பட்டுள்ள இந்தக் கல் “பொறிகல்” என அழைக்கப்படுகின்றது.

# சோதிடம் தரும் வாரபலன்கள்

## 14.02.2016 முதல் 20.02.2016 வரை





சோதிட ஆலோசகர் சி.இராசநாயகம்
0776147392

**மேடராசி**

மனைவியால் அனுகூலம், குடும்ப சுகம், இனசனபந்து சுகம், சிறுசிறு சச்சரவுகள், மன அமைதி குறைவு, அவதூறு வார்த்தைகள் கேட்டல், தேகசுகக் குறைவு, வருவாய் கிட்டுதல், பெண்களால் சந்தோசம், நன்மை கிட்டுதல், சிறு நஷ்ட நிலை, மனக்கவலை, சிறு பொருள் சேதம், மற்றும் விருத்திகள், இலாபம், சுகம் என்பனவும் காட்டும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 16,18,19 திகதிகள்.**

**இடபராசி**

சிறுசிறு அவமதிப்புக்கள், துர் வார்த்தைகள் கேட்டல், சுப சௌக்கியம் கிடைத்தல், தேகசுகம் நன்றாய் அமைதல், இனசனபந்து விரோதம், செய்தொழில் மேன்மை, பய உணர்வு அச்சம் இருத்தல், மறதிக் குணம், சிறுசிறு இடையூறுகள், சொத்து சுகம், தான தர்மம் மற்றும் வெற்றி லாபம், செலவுகள், சில கெடுதிகளையும் அனுபவிக்கப் பலனுண்டு.

**அதிர்ஸ்ட நாட்கள்: 15,17,19 திகதிகள்.**

**மிதுனராசி**

தேகசுகம் பாதிப்பு, கருமங்களில் நஷ்டநிலை, இடையிடையே இலாபமிருத்தல், கலகம் போன்ற நிலை, விவேகச் செயற்பாடுக் இருத்தல், சில விடயங்கள் சாதக நிலை கிடைத்தல், குடும்பம் மனைவி உறவு தொடர்பு நல்ல நிலை, மனப் பயத்துடன் தொழில் நிலையில், பதவி நிலையில், சில மாறுதல்கள் ஏற்றல், மற்றும் திரவிய இலாபம், சுகம், சித்திகள், பணவிரயம் போன்றவையும் சந்திக்க இடமுண்டு.

**அதிர்ஸ்ட நாட்கள்: 14,17,20 திகதிகள்.**

கடகராசி

சுக பலன், தேகசுகம், சில சொத்து திரவியம் சேர்தல், பெண்களால் சில நன்மைகள் கேட்டல், ஒரு சிலருக்கு தேகசுகம் பாதிப்படைதல், பணவரவு இருத்தல், சிறுசிறு பகை இருத்தல், மனதில் கவலைகள் காட்டுதல், பெண்களுக்கு சுகக் குறைவு, மற்றும் நோய், பிணி தொடர்பிலான விரயங்கள், செய்தொழில் மேன்மை பெறுதல், சித்திகள், திரவிய லாபம், என்பனவும் கிட்டும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 15,16,19 திகதிகள்.**

**சிம்மராசி**

பகைகள் உருவாதல், பொருள் விரயம் இருத்தல், விவேகம் குறைந்து புத்தி மந்த நிலை பெறுதல், இடையிடையே இலாபம் காணுதல், வெற்றி நிலைகள், சுபமான நிலை, நோய், பிணி துயரத்தால் அவஸ்தைப்படுதல், மனத்துயரம் காணப்படுதல், மனதில் ஏதாவது பய உணர்வு இருத்தல், வயிற்றில் நோய் அதிகரித்தல், கருமங்களில் தாமத நிலை, மற்றும் நிலைபேறான அதிகார தோரணைகளையும் தரும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 14,17,19 திகதிகள்.**

**கன்னிராசி**

நோய் பிணியால் சில துன்பம் இருத்தல், திரவியலாபம், காரியசித்தி, குடும்பத்தில் சச்சரவு நிலை, கௌரவம், புகழ் பாதிக்கப்படுதல், எடுக்கும் கருமங்கள் அனுகூலமான பலனைத் தருதல், பிரயாணங்களில் எச்சரிக்கை, வயிற்றில் குழப்பமான நிலை, மனப்பயம் கொள்ளுதல், மற்றும் ஆடை, ஆபரண வருமான அதிகரிப்பு, பெண்களால் மனச்சந்தோசம், ஒரு சிலர் சில அவமதிப்புக்களையும் சந்திக்க நேரிடும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 14,17,20 திகதிகள்.**

**துலாம்ராசி**

தேக ஆரோக்கியம் பாதிக்கப் படுதல், சொத்து சுகம் கிட்டுதல், சிறுசிறு சச்சரவுகள், மன அமைதி குறைவடைதல், சில அவமதிப்புக் களுக்கு இடமிருத்தல், இருக்கும் நிலைகளில் சில மாற்றம் உண்டாகுதல், நஷ்டநிலை தென்படுதல், இடையில் மனச்சந்தோசம், இனசன பந்துக்களின் சேர்க்கை, போசன சுகம் இருத்தல், பணநிலை திருப்தி, பிரயாணங்களில் அலைச்சல், மற்றும் இலாபம், சுகம் தன சேர்க்கை, ஆடை ஆபரண சேர்க்கை என்பனவும் காணப்படும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 15,17,19 திகதிகள்.**

**விருச்சிகராசி**

மனச்சஞ்சலம், கெட்டவார்த்தை கேட்டல், தேக சௌக்கியம் இருத்தல், சில சொத்து சுகம் அனுபவித்தல், பெண்களால் நன்மை இருத்தல், தொழில் நிலைகளில் சில மாறுதல்கள், அதிகாரம், சந்தோசம், எதிரி, பகையாளி தொல்லை, செய்தொழில் இலாபம் மனதில் சில துக்கம் மேலிடுதல், கௌரவக்குறைவு, மற்றும் பயம், பணவிரயம், நோய்களால் அவஸ்தைப்படுதல் போன்ற பலன்களை அனுபவிக்கச் செய்யும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 16,18,19 திகதிகள்.**

**தனுசுராசி**

நல்ல பண்பு மரியாதை பேணுதல், களத்திர சுகம் கிடைத்தல், செல்வம், சேமிப்பு நிலை உருவாதல், பல வழிகளிலும் நன்மை இருத்தல், கருமங்களில் வெற்றி கிட்டுதல், இடையிடையே தேகசுகம் பாதிப்படைதல், மனச்சந்தோசம் கிட்டுதல், அலைபாயும் நிலை, ஆடை, ஆபரணச்சிறப்பு, அதிகாரம் செய்தல், சிறுசிறு நஷ்டம் தோன்றி மறைதல், மற்றும் இலாபம், சுகம், விரயம், எதிரியால் பயம் கொள்ளல் போன்ற நிலையும் அமையும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 14,15,18 திகதிகள்.**

**மகரராசி**

சச்சரவுகளால் மன அமைதி பாதிக்கப்படுதல், குடும்ப சுகம், இனசனபந்து சுகம் இருத்தல், தேக சௌபாக்கியம் இருத்தல், சில அவதூறுகளைச் சந்தித்தல், பிரயாணம் மேற்கொள்ளல், களத்திர சுகம் உண்டாதல், தொழில் இலாபங்கள் கிட்டுதல், இடையிடையே சில கஸ்டம், நஷ்டம், உண்டாதல், சிலரை நம்பிக்கை யீனப்படுத்துதல், நோய் கண்டு குணமாதல், கருமங்கள் தாமதப் படுதல், மனத்துயரம் கொள்ளுதல், மற்றும் பணவிரயம், சுகம் இலாபம் என்பவையும், வார நடுப்பகுதியிலும், இறுதியிலும் உண்டாகும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 15,17,19 திகதிகள்.**

**கும்பராசி**

நோய், பிணி, துயரம் காட்டுதல், இருக்கும் நிலையில் மாற்றம், செய்தொழில் வருவாய் அதிகரிப்பு, நம்பிக்கை கொள்ளாத நிலை, பெண்கள் சகாயமிருத்தல், களத்திர சுகம், இடையில் செய்தொழில் நஷ்ட நிலையை நோக்குதல், கௌரவும் பாதிப்பாதல், பணவிரயம், பின் மனச்சந்தோசம், மற்றும் சுகம், போக, லாபம், செல்வம் சேமிப்பு நிலை, சிறுசிறு சஞ்சல நிலையும் தோன்றி மறையும் பலன்கள் கிடைக்கப் பெறும்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 15,17,20 திகதிகள்.**

**மீனராசி**

வாக்குவாத நிலை, கருமங்களில் நஷ்டநிலை, இடையில் திரவிய லாபம், சுகம் கிட்டுதல், எதிர்பாராது துயரம் காட்டுதல், காரிய தாமதம், களத்திர சுகம் உண்டாதல், உனவு சுகம், மனதில் படிப்படியாய் சந்தோசம் ஏற்படுதல், மற்றும் எதிர் தொல்லை, பணவிரயம், அவமானப் படுதல், பெண்களால் சில சந்தோசம், நன்மை என்பனவும் அமையக் கூடிய நிலையும் பெறலாம்.

**அதிர்ஸ்ட நாட்கள்: 14,15,18 திகதிகள்.**

சந்திராஷ்டமம் உள்ள நாட்களில் நோய், பிணி, துன்பம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்புக்கள் ஏற்படலாம் என்பது சோதிட விதி ஆகும். இதனைக் கருத்தில் கொள்ளவும்.

**இவ்வார சந்திராஷ்டமம்.**

கன்னி ராசிக்கு 14,15 திகதிகள்.
துலா ராசிக்கு 16,17 திகதிகள்.
விருச்சிக ராசிக்கு 18,19 திகதிகள்.
தனு ராசிக்கு 20,21 திகதிகள்
ஏனைய 8 இராசிக்கும் இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.



கடந்த இரண்டு மாதங்களாக இலங்கையை சைக்கிளில் சுற்றிவரும் ஜேர்மனிய ஜோடி.தேவையான பொருட்களை சைக்கிளில் மூட்டை கட்டிக் கொண்டு ஊர்வலம் வருகிறார்கள். வடக்கில் தூய காற்று உள்ளதாக கூறும் இந்த ஜோடி, வாகனச்சாரதிகள்தான் முரட்டுத்தனமாக வாகனத்தை செலுத்துகிறார்கள் என குறைபட்டு கொண்டுள்ளனர்.



யாழ்.முகம்மதியா ஜூம்மா பள்ளிவாசலிற்கு வடக்கு ஆளுனர் எச்.எம்.ஜீ.எஸ். பளிக்கார அண்மையில் விஜயம் செய்திருந்தார்.

# அழகின் இரகசியம் 5





திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி

தலைமுடியை போலவே ஒவ்வொருவருக்கும் சரும வகையும் வேறுபடும். உலர்ந்த சருமம் எண்ணெய்ப் பசை சருமம் அலர்ஜியை ஏற்படுத்த கூடிய சருமம் என்று ஐந்து வகையுள்ளது. தங்களின் சருமம் எந்த வகையை சார்ந்தது அதில் உள்ள பிரச்சினை என்னவென்று அறிந்து கொண்டு அதற்கு தகுந்தவாறு தீர்வு காண்பது நல்லது.

### உலர்ந்த மற்றும் பொலி விழுந்த சருமத்திற்கு

சந்தனப்பவுடர் 2 டிஸ் பூன்
புதினா சாறு 48 துளிகள்
பன்னீர் சிறிதளவு

இவை கலந்து முகத்தில் 10 நிமிடங்கள் ஊற வைத்து குளிர்ந்த நீரில் கழுவினால் நன்றாக இருக்கும்.

பாதாம் பருப்பு 4(அரைத்தது)
தேன் 1டிஸ் பூன்
பால் 1 டிஸ் பூன்

இவற்றை கலந்த முகம் கழுத்து பகுதியில் தடவி கழுவலாம்.

1டிஸ் பூன் பால் ஏட்டை முகத்தில் தடவி 5 நிமிடங்பள் கழித்து கழவலாம்.

மில்க் பவுடர் 4டிஸ் பூன் பாதாம் எண்ணெய் ஒரு துளி தண்ணீர் சிறிதளவு இவற்றை கலந்து முகத்தில் போட்டு கழுவலாம்.

மஞ்சல் வாழைப்பழ கூல் ஒரு டேபில் ஸ் பூன் பட்டர் புறுட் இவை இரண்டையும் சேர்த்து முகத்தில் தடவி 10 நிமிடங்கள் ஊற வைத்துக் கழுவினால் உலர்ந்த சருமம் மென்மையாகும்.

### ஸ்க்ரப் செய்ய

சந்தனப் பவுடர் 2டிஸ் பூன்
கஸ்தூரி மஞ்சல் 1 டிஸ் பூன்
கடலை மா 2டிஸ் பூன்
பச்சை பயறு மா 2டிஸ் பூன்
ரோஜா இதழ் 1 டிஸ் பூன்
முல்தானி மெட்டி 4டிஸ் பூன்

குளிக்கும் பொழுது சருமத்தில் லேசாக எண்ணெய் தடவிக் கொள்ளவும்.

இந்த பௌடரில் சிறிது நீர் கலந்து வட்ட வட்ட வடிவமாகத் தேய்த்து குளித்தால் சருமத்திலுள்ள இறந்த செல்கள் நீங்கும். எப்பொழுதும் ஸ்க்ரப் பௌடருடன் நீர் சேர்த்து ஸ்க்ரப் செய்யவும். இல்லையெனில் சருமம் எரியும்.

இதை அடிக்கடி செய்யக் கூடாது. ஸ்க்ரப் பௌடரை சிறிதளவு வைத்துக் கொண்டு எப்பொழுதாவது மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும். இந்தப் பௌடருடன் வேப்பிலை பொடி சிறிது கலந்து வைத்தால் பூச்சி வராது.

### உலர்ந்த சருமத்தினர் தேய்த்து குளிக்க எண்ணெய்

நல்லெண்ணெய் 150 மி.லி
விளக்கெண்ணெய் 150 மி.லி
ஓலிவ் எண்ணெய் 150 மி.லி

இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து அடுப்பில் வைத்து சூடு பறக்கக் காய்ச்சவும். ஏண்ணெய் சூடாக இருக்கும் போதே 250 கிராம் வெள;ளரி விதைப் பொடியை அதில் போட்டு மூடி வைக்கவும். இரண்டு நாள் ஊறிய பிறகு அதை பயன்படுத்தலாம்.

தேவைக்கு ஏற்ப எண்ணெயை எடுத்து உடலில் தேய்த்து அரை மணி நேரம் ஊறிய பிறகு குளியல் பொடி தேய்த்து குளிக்கலாம்.

### எண்ணெய் பசை சருமம்

பப்பாளிக் கூல் 1 டிஸ் பூன்
வேப்பிலைப் பொடி 1/2 டிஸ் பூன்
முல்தானி மெட்டி 2 டிஸ் பூன்

இதை சிறிதளவு பன்னீரில் கலந்த முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்துக் கழுவவும். இறந்த செல்களை நீக்கவும் இந்த பொடி உபயோகமாகும். ஆராஞ்சு பழச்சாறு 1டிஸ் பூன் எடுத்து முகத்தில் பூசி 10 நிமிடங்கள் கழித்துக் கழவினால் எண்ணெய்ப் பசை நீங்கும்.

(ஆராஞ்சு எழுமிச்சை சாறை அப்படியே போடுவதை விட சிறிது நீர் கலந்து போடுவது சருமத்திற்கு பாதுகாப்பானது. )

எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் ஒயில் ஃப்ரீ அல்லது சோப் ஃபீரி பேஸ் வோஸ் உபயோகிக்கலாம்.

### நோமல் சருமம்

இது பிரச்சினை இல்லாத சருமம். ஏந்த வகையான அழகு சாதனங்களும் சிகிச்சையும் ஏற்றுக் கொள்ளும். குலீய்ச்சாத பாலில் பஞ்சை நனைத்து முகத்தில் தடவி சிறிது நேரத்திற்குப் பிறகு கழுவினால் முகம் பளபளப்பாக இருக்கும்.

### கெம்பினேஷன் சருமம்

நெற்றி மூக்கு தாடை பகுதி எண்ணெய்ப் பசையாகவும் மீதமுள்ள பகுதி உலர்ந்தும் இருக்கும். எனவே அந்தந்த பகுதிக்கு ஏற்றவாறு சிகிச்சையை செய்ய வேண்டும்.

### அலர்ஜி சருமம்

கவனமாக கையாள வேண்டிய சருமம் இது. ஒரு டிஸ் பூன் கற்றாழை ஜெல்லுடன் ஒரு டிஸ்பூன் பன்னீர் கலந்த முகத்தில் பூசி பத்து நிமிடத்தில் கழுவலாம்.

தொடரும்...



## இறைச்சிக்கறியின் சுவையை அதிகரிக்க

1. அதிக நேரம் தணலில் விடுங்கள்.
2. இறைச்சியை போட முன்னர் தாளிக்கும் பொருட்களுடன் உள்ளியை கையுரலில் குற்றி போட்டால் வாசமும் சுவையும் அதிகமாகும்.
3. இறைச்சி கூட்டு பைக்கற் அரைத்து போடும் பொழுது சிறிதளவு தக்காளிசோஸ் சேருங்கள்.
4. இறைச்சியை வெட்டும் பொழுதே நடுத்தரமான துண்டுகாளாக வெட்டுங்கள்.
5. கறி குழம்பாக இன்றி நன்றாக எண்ணெய் திரண்டு இறுகும் வரை தனலில் விடும் பொழுது சுவையோ சுவை தான்.



## நீங்களும் பேரூந்தில் பயணிக்கும் பெண்ணா?

பேரூந்து பயணத்தில் அதிகம் ஈடுபடுபவர்கள் பெண்கள்தான். பாதுகாப்பு மற்றும் இலகுவான பயணம் என்பவற்றை கருத்தில் கொண்டு பேரூந்தை நாடும் பெண்கள் பேரூந்துக்குள் எதிர்பாராத தருணங்களில் பாதுகாப்பை இழந்து விடுவதுண்டு. எனவே பேரூந்தில் பயணிக்கும் பொழுது பெண்கள் கருத்தில் கொள்வதெற்கென்று தம்மை காவாந்து பண்ண சில தகவல்கள்.

1 நேர்த்தியான ஆடைகளாக நமது சமூகம் கருதும் சல்வார் அல்லது ஜீன்ஸ் ரொப் பொருத்தமான ஆடை தெரிவாகும்.

2 பலரும் நெரிசலாக பயணிக்கும் நமது பேரூந்துகளில் பாதணிகளை குதிக்கணக்கில் போட்டு மற்றவர்களின் கால்களை பதம் பாக்காது தட்டையான மென்மையான பாதணிகளை பேரூந்த பயணத்தில் அணிந்து கொள்ளலாம்.

3 அதிக தூசிகள் மற்றும் வியர்வை போன்றவை அதிகம் என்பதால் முகப் பருவில் இருந்து முகத்தை பாதுகாக்கும் கிறீம்களை போட தவறக்கூடாது.

4 சில வேளைகளில் நின்றுகொண்ட பயணத்தை மேற்கொள்ள நேரிடும் அல்லவா எனவே சட்டை கைகளின் நீளம் சற்று தன்னும் பதிவாக இருக்க வேண்டும். கட்டை கைகளையோ அல்லது கை இல்லா சட்டைகளையோ தவிர்ப்பது மேல்.

5 அலங்காரம் செய்து பஸ்சில் பயணிப்பது பொருத்தமல்ல. அப்படி தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் நீங்கள் ஏதாவது ஒரு விழாவிற்கோ கோவிலுக்கோ வெளிக்கிட்டு பஸ்சில்செல்ல வேண்டியிருப்பின் உடையின் மேல் ஒரு கோட் போட்டுகொண்டு செல்வதும் ஈரமான ரிசுவினை முக்திற்கு பாவிப்பதும் பொருத்தமானது.

6 இருக்கை இல்லா தருணங்களின் பஸ்சின் முன்பகுதி அல்லது பெண்கள் அதிகம் உள்ள பகுதி பார்த்து நின்று கொள்ளுதல் நாமே தற்பாதுகாப்பு செய்து கொள்வது போன்றது.

7 அதிகதூர பயணம் செய்யும் பெண்கள் பஸ்சில் தூங்குவதை விட்டு பாடல் கேட்கலாம். அல்லது வேறு ஏதும் பொழுது போக்காக இருக்கலாம். விழிப்பாக இருப்பதுவே பெண்களின் முதல் பாதுகாப்பு.

8 தூர இடம் நீங்கள் தனியாக பயணிக்கும் பொழுது உங்களை மட்டும் நம்புகள் யாராவது ஒரு பெண்ணை தோழியாக்கி கொள்ளுங்கள் ஆனால் முழுமையாக நம்பி விடாதீர்கள்.

9 எப்பொழுதுமே உங்கள் கைப்பையில் உங்கள் உடல் நிலைக்கேற்ப மருந்து உட்பட்ட தேவையான பொருட்களை வைத்து கொள்ளுங்கள்.

10 தண்ணீர் சாப்பாடு என்பவற்றை கொண்டு செல்லலாம். அல்லது கடையில் வாங்கி சாப்பிட்டாலும் மற்றவர்களிடம் வாங்கி சாப்பிடுவதை பெரும்பாலும் தவிர்த்து விடுவதே பயணத்தின போது பெண்களிற்கு பாதுகாப்பானது.

# கர்ப்பிணித் தாய்மார்கள் வீட்டில் செய்ய வேண்டிய பிரசவத்திற்கான ஆயத்தங்கள்




வைத்தியகலாநிதி ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - நல்லூர்




உங்கள் குழந்தையின் பிறப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் நீங்கள் உங்களிற்கும் உங்களுக்கு பிறக்கப்போகும் குழந்தைக்குமான ஆயத்தங்களை பிரசவ காலம் நெருங்கும் போது செய்யவேண்டி இருக்கும். இந்த ஆயத்தங்கள் எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் அறிந்திருத்தல் வேண்டும். இந்த ஆயத்தங்களை நீங்கள் உங்கள் குழந்தையை எதிர்பார்க்கும் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக அதாவது (கர்ப்பம் தரித்து 28 கிழமை) செய்தல் வேண்டும்.

இத்தகைய ஆயத்தங்கள் ஏன் முக்கியமானவை என பார்த்தோமேயானால்

1. பிரசவ ஆரம்ப அறிகுறிகள் முன்னறிவிப்பின்றி எந்நேரமும் வரலாம்.
2. பிரசவ அறிகுறிகள் ஆரம்பித்ததும் எல்லா ஆயத்தங்களையும் உங்களால் செய்ய முடியாதிருக்கலாம்.

பிரசவத்தின் ஆரம்ப அறிகுறிகளாகிய பிரசவ வேதனை, இரத்தம் கலந்த கசிவு, பன்னீர்க்குடம் உடைதல், என்பனவாகும். பிரசவ வேதனையின் போது முதலில் நாரி நோவும், அத்துடன் அடிவயிற்றில் நோவும் உண்டாகும். நோ தொடர்ச்சியாக இல்லாமல் விட்டு விட்டு இருக்கும் நேரம் செல்லச் செல்ல நோவின் தாக்கம் அதிகரிக்கும்.

இரத்தம் கலந்த கசிவு என்பது பிறப்புறுப்பினூடாக இரத்தம் கலந்த சளி போன்ற திரவம் வெளியேறும். பன்னீர்க்குடம் உடைதலின் போது பிறப்புறுப்பின் ஊடாக நீர் போன்ற திரவம் சிந்தத் தொடங்கும்.

இம் மூன்று அறிகுறிகளில் ஏதாவது ஒன்று ஆரம்பித்தவுடனே வைத்தியசாலைக்குச் செல்ல ஆயத்தமாக வேண்டும். பிரசவம் எதிர்பார்க்கும் திகதி தெரிந்தால் இவ் அறிகுறிகள் இல்லாத போதும் அத் தினத்தில் வைத்தியசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.

மேலும் குழந்தையின் அசைவு குறிப்பிட்ட 12 மணித்தியாலங்களில் 810 தடவைக்கு கூடினாலும் குறைந்தாலும் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.

**வைத்தியசாலைத் தெரிவு.**

உங்கள் பிரசவத்திற்கு ஏற்ற வைத்திய சாலைத் தெரிவில் உங்கள் கர்ப்பவதிகளின் சிகிச்சை நிலைய வைத்தியரையோ அல்லது குடும்ப வைத்தியரையோ கலந்து ஆலோசியுங்கள். அவர்கள் பின்வரும் விடயங்களை வைத்தே உங்களுக்கு அறிவுரை தருவார்கள்.

நீங்கள் சென்ற கர்ப்பவதிகளின் சிகிச்சை நிலையம், பிரசவ வசதிகள் உள்ள வைத்திய நிலையம் எனில் அருகேயே உங்கள் பிரசவத்தினை வைத்துக் கொள்ளலாம். தேர்ந்தெடுக்கும் வைத்தியசாலை வீட்டிற்கு அருகே இருப்பது நல்லது.

முதல் பிரசவமாக இருத்தல் அல்லது குடும்ப வைத்தியர் உங்களிற்கு பிரசவத்தின் போது ஏதாவது பிரச்சனைகள் ஏற்படலாம் என எச்சரித்து இருப்பின் அல்லது முன்னைய பிரசவங்களில் ஏதாவது பிரச்சனைகள் இருந்திருப்பின் விசேட நிபுணர்களின் கண்காணிப்பு கிடைக்கக் கூடிய பெரிய வைத்தியசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.

**விசேட கவனம் தேவைப்படும் கர்ப்பவதிகள்.**

முதலாவது கர்ப்பம் அல்லது 5 அல்லது அதற்கு மேற்பட்ட கர்ப்பம், 18 வயதிற்கு குறைவு அல்லது 35 வயதிற்கு மேற்பட்டதாய், 38 கிலோகிராமிற்கு குறைவு அல்லது 70 கிலோகிராமிற்கு மேற்பட்டதாய், பிள்ளைகளுக்கு இடையிலான இடைவெளி 6 மாதத்திற்கு குறைவாகவும், 5 வருடத்திற்கு மேலாகவும் இருத்தல், நாள் பிந்திய கர்ப்பம், பொதுவான நோய்களான சலரோகம், காசநோய், இருதய, சுவாச, ஈரல் சம்பந்தமான நோய்கள் உயர் குருதியமுத்தம், பாலியல் நோய்கள், கடுமையான ஆஸ்மா, வலிப்பு, மனநோய், தயிரொயிட் குறைபாடு, சிறுநீரக நோய் இருத்தல்.

**முன்னைய அல்லது தற்போதைய கற்பகால சிக்கல்கள்.**

1. முன்னைய பிள்ளையின் பிறப்பு நிறை குறைவு. (2 கிலோகிராம்)
2. கரு சிதைவு அல்லது சாபபேறு.
3. நீண்ட நேர பிரசவ சிக்கல்.
4. பிரசவத்தின் முன் பிறப்புறுப்பில் இரத்தப்போக்கு
5. முன்னைய சத்திரசிகிச்சை பிரசவம்.
6. இரட்டைக் கர்ப்பம்.
7. கர்ப்பகால குருதியமுத்தம், சலரோகம்.
8. ஆயுத உதவியுடனான பிரசவம்.
9. எக்கிளம்சியா.

**பிரயாண உதவி.**

பிரசவ அறிகுறிகள் ஆரம்பமாக முன்னரே பிரயாண ஒழுங்குகளைத் திட்டமிடுங்கள். அறிகுறிகள் தென்பட்டவுடன் அவை உடனடியாகக் கிடைக்கக் கூடியதாக இருத்தல்.

தேர்ந்தெடுக்கப்படும் வைத்தியசாலை கர்ப்பவதியின் வீட்டில் இருந்து அதிக தூரம் இருப்பின் பிரசவ அறிகுறி ஆரம்பிக்க முன்னரே வைத்தியசாலைக்கு அருகாமையில் உறவினர் வீட்டில் தங்கியிருப்பது சிறந்தது.

**வீட்டு வேலைகள்.**

வீட்டு வேலைகளிற்கு நீங்கள் பொறுப்பாக இருந்தால் பிரசவகாலத்திலும் பிரசவ காலத்தின் பின்னர் வீடு திரும்பியவுடன் உங்களால் வீட்டு வேலைகளை தனித்து செய்ய இயலும் வரை உங்கள் பொறுப்பை ஏற்று நடத்தும் ஒருவரை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். உதாரணம்: ஏற்கனவே குழந்தைகள் இருப்பின் அவர்களின் உணவு மற்றும் தேவைகளை கவனிக்கவும், வீட்டைப் பராமரிக்கவும் ஒழுங்கு செய்தல் அவசியமாகும்.

**குழந்தை பிறந்த பின் உங்களுக்கும் குழந்தைக்குமான இடம்.**

குழந்தை பிறந்த பின் உங்களுக்கும் குழந்தைக்குமான இடத்தை முன்கூட்டியே ஒழுங்குபடுத்த வேண்டும். உங்கள் வீட்டின் வசதிக்கேற்ப தெரிவு செய்யவும். தனியறையாக இருப்பின் நல்லது. தெரிவு செய்யும் இடம், துப்பரவு, காற்றோட்டம், வெளிச்சம், என்பவற்றுடன் நுளம்பு பூச்சிகள் அற்ற இடமாக இருத்தல் வேண்டும். குழந்தைக்குரிய தொட்டில் நுளம்புவலை வைத்திருப்பது நல்லது. அத்துடன் குழந்தையின் உள விருத்தியைத் தூண்டக் கூடிய விளையாட்டுப் பொருட்களை குழந்தை பார்க்கக் கூடியதாக வைத்திருங்கள். இவை பல்வேறு சத்தம், வடிவம், நிறங்கள், கொண்டிருத்தல் சிறந்தது.

வைத்தியசாலைக்குச் செல்லும் போது எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்கள்.

இவை பற்றிய பட்டியல் உங்களுடைய குடும்ப நல சுகாதார உத்தியோகத்தரினால் தரப்படும் அவற்றை ஒரு suitcase எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் உங்கள் வைத்திய குறிப்பேடுகள், கிளினிக் கொப்பிகளையும் உடுத்து ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும்.

# வளையல்கள் பல விதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்



வளையல்களின் பல விதங்களில் மயங்காத பெண்களும் இல்லை. அவற்றை அணிந்து அழகு பார்காதவர்களும் இல்லை. உடைக்கேற்ப நிறம் பார்த்து வளையல் அணியும் பெண்கள் ஆடையின்தரம் தமது தோற்றம் இடத்திற்கேற்ப வளையல்களை தெரிவு செய்ய தவறிவிடுகின்றார்கள்.

பிளாஸ்ரிக், முத்து, கம்பி இகண்ணாடி போன்ற பல விதமான வளையல்கள் கடைகளின் வளயல் புறத்தை அலங்கரி;த்தாலும். அவை எல்லாவற்றையும் வாங்கி அணிவதில் பெண்களுக்கு உள்மன ஆசை இருந்தாலும் பொருளாதாரம் மற்றும் தேவை என்பதற்கு ஏற்பவேதான் வாங்க முடியும் அல்லவா.

எனவே பை பணத்தையும் அணிய போகும் ஆடை இடம் என்பவற்றையும் நினைவுபடுத்திய பின்னரே தெரிதலை தொடர வேண்டும்.

**இடம்**

நீங்கள் அணிந்து செல்லப் போகும் இடம் எது என்பதை மனதில் கொள்ள வேண்டும். திருமணவீடாக இருப்பின் அதிகம் சாறி சல்வார் முழுத்தாவணிபாவாடை இவற்றில் ஒன்றை கொஞ்சம் அலங்காரம் கூடியதாகவல்லவா அணிவார்கள் நமது பெண்கள். எனவே அடுக்காக வரும் கம்பி கலர் காப்புகள் தெரிதலை மேற்கொள்ளுதல் பொருத்தமானதாகும். அதில் ஸ்ரோன் மினுங்கள் கில்டர் பதிப்புக்கள் என பல வகையுள்ளது. எனவே எமக்கு பிடித்தால் போல் தெரிதலை மேற்கொள்ளலாம்.இல்லை பிறந்த தினம் புகுமனை புகுவிழா போன்ற சிறிய மங்கள விழாக்களுக்கு அலங்காரமற்ற சாதாரண வளையல்கள் குறைந்தளவில் போட்டாலே போதுமானதாகும்.

**ஆடை**

நீங்கள் அணிந்து செல்லப் போகும் ஆடை அலங்காரம்கூடியதாகஇருப்பின் வளையலின் அலங்காரம் குறைவாக இருப்பதே பொருத்தம். இல்லையோ உங்களை மணப்பெண்ணாக நினைத்து விடுவர். அத்தோடு ஆடையின் கலரோடு அச்சொட்டாக பொருந்தும் வளையல்களை தெரிவு செய்வதை விட ஆடையில் தெறித்திருக்கும் ஏதாவது ஒரு கலரோடு பொருந்தும் வகையிலோ அல்லது வெள்ளி சில்வர்இ தங்கம் போன்ற பொது கலர்களிலோ வளையலை தெரிவுசெய்து அல்லது ஆடையின் கலரை விட சற்று லைற்றாக கலரை தெரிவு செய்தால்; அசத்தளாக இருக்கும்.

**உங்களுக்கேற்ப**

நீங்கள் மெல்லியவரான தோற்றம் உடையவரா கம்பி மற்றும் முத்து வளையல்கள் மெல்லிய கரங்களுக்கே அழகானது. இல்லை நீங்கள் பருமனான தோற்றம் உடையவரா மாபில் அல்லது சில்வர் காப்புகள் உங்களுக்கு பொருத்தமானவை. நடுத்தரமான தோற்றமுடைய கரங்களை உடையவராக இருப்பின் உங்கள் கைகளுக்கு எதுவும் போட முடியும் எதுவும் பொருத்தமானதாக இருக்கும் எனினும் உங்களுக்கும் சில்வர் அல்லது கம்பி காப்புகள் தான் பொருத்தமானவை.




## தூக்கியெறியப்பட்ட செயலாளர்கள்

# என்ன நடக்கிறது உள்ளூராட்சி திணைக்களத்தில்?

வடமாகாணத்தில் பிரதேசசபை செயலாளர்களாக பதவி வகித்த ஒன்பது பேர் தரமிறக்கப்பட்டுள்ளனர். பல வருடங்களாக அந்தப்பதவியிலிருந்தவர்கள் ஏன் திடீரென தூக்கியெறியப்பட்டனர்? பதவியிலிருக்கு தகுதியில்லையெனில் எப்படி நியமனம் பெற்றனர்? அந்தப்பதவிக்கு பொருத்தமற்றவர்களெனில், அதுவரை எப்படி மக்கள் பணியாற்றினார்கள்? அல்லது, இந்த 'தூக்கியெறி'யின் பின்னணியில் வேறேதும் காரணங்கள் உள்ளனவா? மக்களின் அன்றாட செயற்பாட்டுடன் அதிக தொடர்புள்ள ஒரு அரசதுறையின் அம்பலத்திற்கு வராத சங்கதிகளை வெளிச்சமிடுகிறது தீபத்தின் இவ்வார ரெலஸ்கோப்.

வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள், திணைக்களங்களில் தற்போது மொத்தமாக 26 உள்ளூராட்சி உதவியாளர்கள் பல்வேறு பணிநிலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் பிரதேச செயலாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள். இவர்களில் 9 பேருக்குத்தான் 'காற்று போயுள்ளது'.

இவர்கள் ஏன் பதவியிறக்கப்பட்டார்கள் என்பதுதான் இப்பொழுது சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

இவர்கள் பதவியிறக்கப்பட்டு, அந்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளவர்கள் 2014 இல் அறிமுகப்படுத்தப்பட்ட 'சுப்புரா' தர பரீட்சையில் தகுதிபெற்றவர்களே. இதுதான் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. சுப்பிரா நியமனம் பெற்றவர்களை மட்டுமே பிரதேசசபை செயலர் பதவிக்கு நியமிப்பதென வடமாகாணசபை எடுத்துள்ள விடாப்பிடி முடிவே இந்த சிக்கலிற்கு காரணம் என்பது பாதிக்கப்பட்டவர்கள் தரப்பு வாதம்.

உள்ளூராட்சி உதவியாளர்களை நேர்முகப் பரீட்சை மூலம் செயலாளர்களாக உள்வாங்க வேண்டுமென்பதே உள்ளூராட்சிசபை நடைமுறை. அதன் பின்னர்தான் இணைந்த சேவையை சேர்ந்த சுப்பிரா தரத்தினரை உள்வாங்க வேண்டும். ஆனால், வடமாகாண சபை நிர்வாகம் விதிமுறைகளை பொருட்படுத்தாமல் நடந்துள்ளது என்பது பாதிக்கப்பட்டவர்கள் தரப்பு வாதம்.

பிரதேச செயலகங்களை ஒத்ததாகவே உள்ளூராட்சிசபை செயலாளர் பதவி நியமனம் முன்னர் நடைமுறையில் இருந்தது. இலங்கை நிர்வாகசேவை தர (SLAS-iii) அதிகாரிகளே பிரதேச செயலாளராகவும், பிரதேசசபை செயலாளராகவும் நியமிக்கப்பட்டு வந்தனர். உள்ளூராட்சி உதவியாளர்கள் இந்த அடிப்படையிலேயே நியமனம் பெற்றனர். எனினும், 2012 இல் புதிய ஆளணி அங்கீகரிப்பு திட்டத்தின்போது உள்ளூராட்சி உதவியாளர் விசேட பதவி அணியை வடமாகாண உள்ளூராட்சி நிர்வாகம் ஒழித்துள்ளது. 2014இல் முகாமைத்துவ உதவியாளர் சுப்பிரா தரத்தை மட்டும் நேர்முகத்தேர்வில் தெரிவு செய்தனர். உள்ளூராட்சி உதவயாளர்கள் நேர்முகத் தேர்விற்கு உள்வாங்கப்படவில்லை.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த நிர்வாகசேவை தரத்தினரை உள்வாங்குவதா, புதிதாக அறிமுகமான சுப்பிரா தரத்தினரை உள்வாங்குவதா என்ற அரச நிர்வாக குழப்ப முடிவே இந்த சிக்கலின் பின்னணி. இதற்குள் 'அரசியலும் விளையாடுகிறது' என்றும் ஒரு கருத்து உள்ளது. முன்னர் அதிகாரத்திலிருந்த தரப்பினரின் நியமனங்களை, தற்போது அதிகாரத்தில் உள்ளவர்கள் அகற்றுகிறார்கள் என்றும் உள்ளூராட்சி திணைக்களத்தில் பேச்சுள்ளது. எது எப்படியோ, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட செயன்முறை ஒன்றிற்காக ஏற்கனவே நியமனம் பெற்றவர்கள் அகற்றப்படுவதென்பது முறையான நிர்வாக செயற்பாடல்ல.

தற்போது சுப்பிரா தரத்தில் உள்ளவர்கள் ஏனைய திணைக்களங்களிற்கு பதவி உயர்வு பெற்றுச் செல்ல அனேக வாய்ப்புக்கள் உள்ளன. எனினும், உள்ளூராட்சி உதவியாளர்களிற்குசெயலாளர் பதவியைவிட ஏனைய வாய்ப்புக்கள் குதிரைக்கொம்புதான்.

இந்த விவகாரத்தில் மாகாணசபையை மட்டும் குற்றம் சொல்லியும் தவறில்லை என்பதும் ஒரு வாதம். சில பதவியிறக்கங்கள் அரசியல் காரணங்களினால் நடந்திருக்கலாம். ஆனால் சில நியாயமானவைதான் என்கிறார்கள். பதவியிறக்கப்பட்ட சிலர் பதவியிலிருந்தபோது நடந்து கொண்ட விதம் பலத்த விமர்சனங்களை சந்தித்ததென்ற கருத்தும் உள்ளது.


அதேவேளை வடக்கு உள்ளூராட்சி உதவியாளர்களிற்கு நிகழ்ந்துள்ள மிகப்பெரிய அநீதியையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும்.

> பந்தாடப்பட்ட ஒன்பது பேரில் ஒருவரின் கதை பெரும் சோகக்கதை. முன்னர் வேலணை பிரதேசசபை செயலாளராக இருந்த ஒருவர், மகிந்த ஆட்சியில் அதிகாரத்திலிருந்த தமிழ்கட்சி ஒன்றினால் பந்தாடப்பட்டார். சிறிதுகாலம் வேறொரு உள்ளூராட்சிமன்றத்தில் பணியாற்றிய பின்னர், பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்தக்காலப்பகுதியில் அவர் அங்கம் வகிக்கும் பொதுஅமைப்பு ஒன்றின் சார்பாக, இரணைமடு நீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவர வேண்டுமென பொதுமக்களிடம் கையெழுத்து சேகரித்துள்ளார். இந்த தகவல் முதல்வரின் காதிற்கு செல்லவே, அவர் பந்தாடப்பட்டுள்ளார். அதனை தொடர்ந்தே ஏனைய எட்டுப்பேரும் பதவியிறக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் 1999 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன. அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர், பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணக்குறிப்பின் அடிப்படையில், நியமனத் திகதியிலிருந்து 5 வருடங்களின் பின்னர் 2004 இல் வகுப்பு ii பதவி உயர்வு வழங்கப்பட்டது. 10 வருடங்களின் பின்னர் 2014 இல் வகுப்பு மி பதவி உயர்வு வழங்கப்பட்டது. கிழக்கில் உள்ளூராட்சி உதவியாளர்கள் நியமனம் பெற்ற அதேநாளில் வடக்கில் நியமனம் பெற்றவர்களிற்கு எந்த பதவி உயர்வும் கிடைக்கவில்லை. மாறாக தற்போதைய பந்தாடலும், சுப்பிரா வில்லங்கமும்தான் கிடைத்தவை.

அதிகாரங்கள் மாறும்போது அதிகாரிகளின் தலை உருளும்தானே என்ற நிலையை வடக்கு மாகாணசபையும் ஏற்படுத்தக்கூடாது. மக்களின் எதிர்பார்ப்பு நல்ல ஆட்சியொன்றே. நல்ல ஆட்சியென்பது எல்லா அபிப்பிராயங்களையும் சகித்துக் கொள்ளும் பரந்த ஜனநாயக மனமே.

# சுழன்றடிக்கும் தமிழ் புயல்



கடந்த நான்கு வருடங்களாக இலங்கையின் ரெனிஸ் தரப்படுத்தலில் முதல்த் தரத்தில் ஒரு தமிழன் இருக்கிறார் என்ற தகவல் எத்தனை பேருக்கு தெரியும்?

கிரிக்கெட், உதைபந்து, மல்யுத்தங்களில்கொடிகட்டி பறக்கும்சர்வதேச நட்சத்திரங்களை அறிந்துள்ள நாங்கள், சத்தமில்லாமல் சாதித்துக் கொண்டிருக்கும் நம்மவர் ஒருவரை அறிந்திராதது பெரும் துயரமே.

**தங்கராஜா டினேஸ்காந்தன்.**

மட்டக்களப்பின் ஆரையம்பதி மாவிளங்கன்துறையை சேர்ந்தவர் டினேஸ்காந்தன். இந்தியாவின் நடந்து முடிந்த தெற்காசிய நாடுகளிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் ரென்னிஸ் ஆட்டத்தில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டிருந்தார். ஆண்கள் இரட்டையர் பிரிவில் இறுதிப்போட்டிவரை முன்னேறி, தங்க வாய்ப்பை நூலிழையில் தவறிவிட்டிருந்தார்.

இலங்கையின் டேவிஸ் கிண்ண அணி, 2010 கொமன்வெல்த் போட்டிகளில் எல்லாம் பங்குபற்றியிருக்கிறார்.

மட்டக்களப்பின் கோட்டமுனை கனிஸ்ட வித்தியாலயம், புனித மிக்கல் கல்லூரி என்பவற்றின் ஆரம்ப கால மாணவன் இவர். பாடசாலைக்காலத்திலேயே ரென்னிஸில் அசாத்திய திறமை கொண்டிருந்ததை பார்த்து பெற்றோரும் ஊக்கமளிக்க, 'புயலாக சுழன்றடிக்க' தொடங்கியுள்ளார். கொழும்பு புனித பீற்றர்ஸ் கல்லூரிக்கு ரென்னிஸ் புலமைப்பரிசிலில் சென்றபின்னர் டினேஸ்காந்தனிற்கு எல்லாம் ஏறுமுகம்தான்.

இலங்கை ரென்னிஸ் உலகத்தில் டினேஸ்காந்தன் முன்னணி வீரராகி பலவருடங்களாகிவிட்டது. ஆனால் நம்மத்தியில் உள்ள ஒரு நட்சத்திரத்தை நாங்கள் அடையாளம் காணாமல் இருந்து விட்டோம் என்பதுதான் கவலையானது.



# வைத்தியரிடம் கேளுங்கள்




வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687



> காய்ச்சல் ஏற்படும் போது சோடா வேண்டிக்குடிப்பது எமது வழக்கமாகிவிட்டது. சோடாவின் பக்கவிளைவுகள் பற்றியும் அது உடல் நலத்திற்கு தீங்கெனவும் அறிகிறோம். காய்ச்சலின்போது குடிக்கக்கூடிய இயற்கைப் பானங்கள் எவை?

**எஸ். சகாயம் (55)**
**நாவாந்துறை.**

**கேள்வி :** எனக்கு குதிக்கால்களில் வலி ஏற்படுகிறது. காலையில் எழுந்தால் பாதங்களை நிலத்தில் வைத்து நடக்கமுடியாதுள்ளது. இதற்கு பயன்படுத்தக்கூடிய மருந்து,




எண்ணெய்கள் குறிப்பிடுவீர்களா?

**பதில்:** இதை ஆயுர்வேத வைத்தியத்தில் ஆமவாதம் (குதிக்கால்வாதம்) என்பர். தினம் மூன்று வேளை யோகராஜ குக்குழு எனும் மருந்தை இரண்டு குளிகை வீதம் சித்தரத்தை கசாயத்தில் எடுக்க வேண்டும். வெளிப்பாவனைக்கு மகாநாரயண தைலம், தாளங்காய் எண்ணெய் போன்றவற்றில் ஒன்றை பூசி சூடாக ஒத்தடம் கொடுக்கவும்.

**நிர்மலன் (16)**
**சாவகச்சேரி**

**கேள்வி:** இரவில் அதிகநேரம் விழித்திருந்து படிக்கிறேன். சில வேளைகளில் கண் வலி ஏற்படுகிறது. பகலில் கண்கள் வறட்சியாக இருக்கிறது. தலைக்கு மருந்தெண்ணெய் பாவிக்கலாமா?

**பதில்:** இரவில் அதிகநேரம் விழித்திருப்பதால் இப்படி நேரலாம். இரவில் விழித்திருப்பதை குறையுங்கள். கண் வறச்சிக்கு கண்ணீர் சுரப்பிகள் சரிவர தொழிற்படாமையும் காரணமாகலாம். கண் மருத்துவரிடம் கண்ணைச் சோதித்துக்கொள்ளுங்கள். பொன்னாங்காணித்தைலம், நீலிஜாதித்தைலம்,



பிருங்காமலத்தைலம் என்பவற்றில் ஒன்றை வைத்து முழுகிவர கண்குளிர்ச்சி எற்படும்.

**எஸ்.புஸ்ப்பராணி (40)**
**வரணி, இயற்றாலை.**

**கேள்வி:** காய்ச்சல் ஏற்படும் போது சோடா வேண்டிக்குடிப்பது எமது வழக்கமாகிவிட்டது. சோடாவின் பக்கவிளைவுகள் பற்றியும் அது உடல் நலத்திற்கு தீங்கெனவும் அறிகிறோம். காய்ச்சலின் போது குடிக்கக்கூடிய இயற்கைப் பானங்கள் எவை?

**பதில்:** காய்ச்சலின் போது சமிபாட்டுத்தொகுதி பலவீனமாக இருக்கும். தோடம்பழ ரசம் சிறந்த நீராகாரம். விற்றமீன் சீ இதில் அதிகளவில் இருப்பதால் அதிக நன்மை அளிக்கிறது. நன்னாரி வேர் எடுத்து குளிர்ந்த நீரில் உறவிட்டு சிறிது சீனிசேர்த்து அருந்தலாம். உடற்சூடு, நாவறட்சி என்பவற்றை நன்னாரி போக்குகிறது. சிறுபிள்ளைகளுக்கு நெற்பொரி அவித்த நீர் சிறப்பானது. இதனால் விற்றமின் பி நிறையக் கிடைக்கிறது. சளிக்காய்ச்சல் அல்லது தைபொயிட் ஏற்பட்டால் மாதுளம்பழ யூஸ் கொடுக்கலாம். வயிற்று அஜிரணத்தால் எற்படுகின்ற காய்ச்சலுக்குமோர் சிறந்த பானமாகும்

வைரஸ் காய்ச்சலில் செவ்விளநீர் சிறந்த பானம். இவ்வளவு இயற்கை பானம் இருக்க சோடாவை ஏன் தேட வேண்டும்.

**தேவமலர் (42)**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

**கேள்வி :** எனது பிள்ளைகளுக்கு வயிற்றில் பூச்சித்தொல்லை அடிக்கடி ஏற்படுகிறது. வயிற்றுப்பூச்சிக்கு தமிழ் மருந்து சொல்வீர்களா?

**பதில்:** ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் கிடைக்கின்ற சுரம்விதுரவடி எனும் ஆயுள்வேத குளிகையை 6வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு காலையில் 2, மாலையில் 2 என்ற வீதத்தில் கராம்புக் குடிநீரில் கொடுத்து வந்தால் பூச்சித் தொல்லையில் இருந்து நிவாரணம் பெறலாம்.

**தவமணி (50)**
**அரியாலை**

**கேள்வி:** எனக்கு மூட்டுவலி இருக்கிறது. சிகிச்சைக்காக சென்ற போது கல்சியக்குளிசை பாவிக்க சொன்னார்கள். கல்சியக்குளிசைக்குப் பதிலாக நான் எடுக்கக் கூடிய கல்சியம் அடங்கியுள்ள உணவுவகைகள் எவை?

**பதில்:** குறைந்த கொழுப்புள்ள பாற்பொருட்களை எடுக்கலாம். முட்டைக்கோஸ், பீற்றூட் போன்ற மரக்கறிகள் தோடை, கொய்யா, வாழை, அப்பிள், பேரிந்து போன்ற பழங்கள் உழுந்து, குரக்கன், நெத்தலி, மீன் என்பனவும் உடலுக்கு கல்சியத்தை வழங்கக்கூடிய உணவுகள் ஆகும்.

**வசந்திரா (23)**
**மானிப்பாய்.**

**கேள்வி:** எனக்கு இறால், கணவாய் போன்றவற்றை சாப்பிட்டால் உடம்பெங்கும் கடி ஏற்படுகிறது. தோல் சிவந்து தடிக்கிறது. மருத்துவமனையில் காட்டியபோது allergy என்றார்கள். இது எதனால் ஏற்படுகிறது. இதை தீர்க்கும் சித்தமருந்துகள் இருக்கிறதா.

பதில்: எமது உடலில் நோய் எதிர்ப்பை உருவாக்கும் Immune System குருதியில் உண்டு. இவை எமது உடலுக்குள் வருகின்ற வைரஸ் பற்றீரியா போன்ற நுண்ணுயிர் கிருமிகளை அழிக்க போராடுகின்றன. சில வேளைகளில் எமக்கு தீமையில்லாத உணவுப் பொருட்களுக்குகூட எதிராகசெயற்படலாம். இதன் போது histamine எனும் இரசாயனம் வெளியேறுகிறது. இதுவே ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது

சில இறைச்சி வகைகள் சில வகை மீன்கள், றால், கணவாய் என்பன சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன தக்காளி, கத்தரி போன்ற மரக்கறிவகைகளும் கொய்யா, அன்னாசி போன்ற சில வகைப்பழங்களும் ஒவ்வாமையை எற்படுத்துகின்றன. ஒருமுறை ஒவ்வாமைஏற்பட்டால் சிலகாலங்களுக்கு அத்தகைய உணவுகளை தவிர்ப்பதே நல்லது. மிளகு அதிமதுரம் நன்னாரி காரம்பு என்வற்றை சம அளவெடுத்து கசாயம் செய்து அருந்த ஒவ்வாமை பாதிப்புவிலகும் திரிபலாதி சூரணமும் பலனளிக்கிறது.


**எஸ்.மாலதி (30)**
**வட்டுக்கோட்டை.**

**கேள்வி:** எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்து பத்து மாதங்கள் ஆகின்றது .என்னுடைய வயிறு தொப்பை விழுந்தது போல் பெரிதாக உள்ளது என்ன செய்யலாம்

**பதில்:** பிரசவம் முடிந்ததும் வயிறு தளர்வாக இருக்கும் ஆறு வாரங்களின் பின் பின்வரும் யோகாசன பயிற்சிகளை செய்வதன் முலம் வயிறு பெரிதாவதை தவிர்க்கலாம்.

**வஜ்ராசனம்**

**செய்முறை:** முதலில் இரு கால்களை பின்புறமாக மடக்கி உட்




கார்ந்து நம் பின்புறங்கள் இரு கால்களின் மேல் இருக்குமாறு உட்கார வேண்டும். இடது கால் கட்ட விரலில் வலது கால் கட்ட விரலை வைத்து அமரவேண்டும். இதே நிலையில் 15 நிமிடம் இருக்கவும்.

**புயங்காசனம்**

செய்முறை. குப்புறப்படுக்கவும், கால்களை இரண்டும் சேர்ந்து இருக்கட்டும். முகவாய்க் கட்டை தரையில் படிந்திருக்க வேண்டும்.

இரு உள்ளங்களைகளையும் மார்புக்கு அருகில் பக்க வாட்டில் வைத்து அழுத்தி மூச்சை நன்கு உள்ளிழுத்துக் கொண்டு பாம்பு




படம் எடுப்பது போல மெதுவாக தலையையும், மார்பையும் படிப்படியாக உயர்த்தவும்.

தொப்புளுக்கு கீழ் உள்ள பாகம் தரையில் படிந்திருக்க வேண்டும். இந்நிலையில் 30 விநாடிகள் இருக்கலாம். பிறகு மெதுவாக படிப்படியாக ஆரம்ப நிலைக்கு வரலாம். இதை 2 முறை செய்தால் போதும்

**மச்சாசனம்**

பத்மாசனத்தில் அமர்ந்த வண்ணமே வலக்காலை இடத்தொடை மீதும், இடக்காலை வலத்தொடை மீதும் போட்டுக் கொள்ளவும் கால்களைப் பிரிக்கக்கூடாது.

அப்படியே பின்னால் வளைய வேண்டும். அதற்கு முதலில் இரு கைகளையும் பின்பக்கமாக உயர்த்திய வண்ணம் தரையின் ஊன்றவும். பின்னர் மெல்ல மெல்லக் கழுத்தைப் பின் பக்கமாய




வளைத்துக் கொண்டே போகவும். தலையைத் தரையில் படும்வரை வளைத்துக் கொண்டு வைத்துக் கொள்ளவும்.

**பழைய நிலைக்கு வரவும்**

இடுப்பும், மார்பும் மேல்நோக்கி வில் போல் வளைந்து வருமாறு பார்த்துக்கொள்ளவும். இந்நிலையில் கால் தொடைகள் இரண்டும் தரையில் இருக்க வேண்டும். மெல்ல மெல்லக்கைகளை மீண்டும் உயர்த்தி முன்னால் கொண்டு வரவும்.

முன்னால் கொண்டு வந்த இரு கைவிரல்களாலும் இரு கால் பெருவிரல்களைப் பிடித்துக்கொள்ளவும். இப்போது மூச்சை நன்றாக உள்ளுக்கு இழுத்துக்கொண்டு மெல்ல வெளியே விட வேண்டும். இந்த நிலையில் ஒரு முழு நிமிடம் வரை இருக்க வேண்டும். இதன் பின்னர் மெல்ல மெல்ல ஆசனத்தைக் கலைத்துக் கொள்ளலாம்.




# வலசைப்பறவைகளின் குளிர்கால வாழிடம்

கணபதிப்பிள்ளை அசோகன்
Asokan 2301@gmail.com



கடந்த அத்தியாயத்தின் இறுதியில் இலங்கையில் வலசைப்பறவைகளின் வாழிடங்கள் பற்றி கூறுவதாக செல்லியிருந்தேன்.இதன் படி இப்போது (பெப்ரவரி, மார்ச்) மாதங்களில் வலசைப்பறவைகள் காணப்படும் இடங்கள் பற்றிய குறிப்பான விபரங்களைப் பற்றியும், அந்த வாழிடங்களை அவை தெரிந்தெடுப்பதற்கான காரணங்களையும் அதற்கான காரணகாரியத் தொடர்பையும் விளக்குவதாக உள்ளேன்.

குடிபெயர் பறவைகளின் குளிர்கால உணவுதேடல் பிரதேசங்கள் என்றால் என்ன? இந்த விடயத்தினை விரிவாகப் பார்க்க முன்னர் ஒரு அங்கியின் வாழிடம் என்றால் என்ன? என்று பார்ப்போம்.

வாழிடம் என்பது ஒரு அங்கி தனது உணவு, பாதுகாப்பு, இனப்பெருக்கம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுடன் ஏனைய தேவைகளையும் தரக்கூடிய ஒரு பௌதீக இடத்தில் அல்லது அப்படியான பண்புள்ள ஒரு இட வீச்சினை உள்ளடக்கும்.

அதன் தொடர்ச்சியாகப் பறவைகளின் வாழிடம் என்றால் என்னவென்று பார்த்தால் ஏனைய விலங்குகளைப் போல அல்லாமல் பறவைகளின் பறத்தல் என்ற திறமை காரணமாக அவற்றின் வாழிட வீச்சு வித்தியாசமானதாக இருக்கும்.

இங்கு நாம் கருதும் குடிபெயர் பறவைகளின் குளிர்கால வாழிடம் (வலசைப் பறவைகளின் குளிர்கால வாழிடம்) என்பது எமது இலங்கைக்கு உட்பட்ட (இலங்கையின் வட பகுதி உட்பட) மத்திய கோட்டுக்கு அண்மைய அல்லது தென்னரைக்கோள நாடுகளில் காணப்படும் வாழிடமாகும்.

இந்த குடிபெயர்வாழிடங்கள் கொண்டுள்ள பொதுப்பண்புகளை குறிப்பாக இயற்கைநேய உல்லாசத்துறைக்கு (NATURE TOURISAM) அவை கொண்டுள்ள பண்புகளைப் பற்றி விபரமாகப் பார்ப்போம். இலங்கையின் கடலோரங்களில் அரைவாசிக்கு மேலானவை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கின்றன. என்ற சுவாரஸ்யமான அதே வேளை பெருமைப்பட வேண்டிய அம்சம் எம்மிடம் இருக்கின்றது.

**எந்த உயிரினமும் வாழ்வதற்கு உணவு தேவை உணவு தொடர்ச்சியாகவும், தரமாகவும் கிடைக்க வேண்டும். அப்படியான இடங்களுக்காக இங்கு வந்த போது கடல்நீரேரிகள் பறவைகளிற்கான உணவு தரக் கூடிய உறுதியான நிலையில் காணப்படுகின்றன.**

இயற்கையாக வந்து போகும் இந்த வலசைப் பறவைகளை மையமாக வைத்து (முதலாக வைத்து) அந்த அந்த கடல் நீரேரிகள் கிராமங்களில் உள்ள இளைஞர் மற்றும் நடுத்தர வயதினருக்கும் பகுதி நேரமாக அல்லது முழுநேரமாக வருமானம் தரும் ஒரு தொழில் துறையாக இயற்கை நேய உல்லாசத்துறை இருக்கின்றது.

எனவேஇப்போதுபறவைகள்வந்துபோகும் அந்த வாழிடங்கள் அவற்றின் பண்புகள் தரங்கள் மாறாமல் பேணப்பட்டதனாலேயே பறவைகள் தொடர்ந்தும் வந்து போகின்றன. இயற்கை நேய உல்லாசத்துறையை நாம் பேண வேண்டும் எனெனில் அவற்றிற்காக குடிபெயர் பறவைகள் எங்கே போகின்றன என்பதனை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

எவற்றைத் தேடி பறவைகள் குறிப்பாக அந்த வாழிடங்களுக்கு வருகின்றன.

எந்த உயிரினமும் வாழ்வதற்கு உணவு தேவை உணவு தொடர்ச்சியாகவும்,தரமாகவும் கிடைக்க வேண்டும். அப்படியான இடங்களுக்காக இங்கு வந்த போது கடல்நீரேரிகள் பறவைகளிற்கான உணவு தரக் கூடிய உறுதியான நிலையில் காணப்படுகின்றன. அனேகமான கடல் நீரேரிப் பறவைகள் (கடற்பறவைகள்) உணவாகக் கடல் நீரேரிகளில்காணப்படும்உணவுகளையே உட்கொள்ளுகின்றன. அவை பிரதானமாக நத்தைச்சிற்பி, மட்டி ஆகியவற்றை உணவாக உட்கொள்ளுகின்றன. அவை அங்கு வாழ்வதற்கான பௌதீக இரசாயன பண்புகளை அந்த வாழிடங்களில் கொண்டுள்ளன. குறிப்பாக கடல் நீரும் இல்லாமல் நன்னீரும் இல்லாமல் காணப்படும் சவர் நீர் நிலைகள் தான் இவற்றிற்கு உணவு வழங்கக் காரணம்.

இவ்வளவு அத்தியாயங்களிலும் குடிபெயர் பறவைகளின் பயணம் மற்றும் சூழலியல் பற்றிய இடிப்படைத் தகவல்களைப் பார்த்தோம். இந்தத் தகவல்கள் குடிபெயர் பறவைகள் எமக்குத் தருகின்ற பொருளாதார, சூழலியல் நன்மைகள் பற்றி விளங்கிக் கொள்வதற்கு மிக முக்கியமானதாகும். பறவையியல் துறை நிபுணத்துவம் அற்ற ஒரு சாதாரண பொதுமக்களுக்கு (வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள், சமூகசேவையாளர், அரசியல் வாதிகள்) இதற்கு மேல் விபரமாக அந்தத் தகவல்கள் தேவை இல்லை.


அடுத்த அத்தியாயங்களில் இருந்து வலசைப் பறவைகள் வடபகுதிக்கு வந்து போவதனை நாம் உறுதிப்படுத்தினால் எமக்குக் கிடைக்க இருக்கும் பொருளாதார நன்மை உட்பட ஏனைய நன்மைகளைப் பார்ப்போம்.

இன்று வடமாகாண முதலமைச்சரின் தலைமையில் விசேட குழு அமைக்கப்பட்டு வட மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பொரும் முயற்சிகளும் முதலும் உள்ள செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில் இந்தக் கட்டுரையாளர் முன்னாள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திப் பணியாளர் என்ற முறையில் கிடைத்த உத்தியோகப் பற்றற்ற தகவல்களின் படி மாங்குளத்தில் வன்னி ரெஸ்ரோரன்ஸ் இற்குப் பக்கத்தில் வடபகுதிக்கான சுற்றுலாத்துறை தகவல் மக்களை அதாவது அடுத்த குடிபெயர் பறவைகளும், சுற்றுச்சூழல் சுற்றுலாத்துறையும் இதுவரை வந்த அத்தியாயங்களின் ஊடாக குடிபெயர் பறவைகள் பற்றிய அடிப்படை விடயங்களைப் பார்த்தோம். இந்த அடிப்படைத் தகவலுடன் நாம் குடிபெயர் பறவைகள் பேணல் மற்றும் பாதுகாப்பினூடாகக் கிடைக்கும் பொருளாதார மற்றும் சூழலியல் நன்மைகள் எவை என அறிந்து கொள்வது எமக்குப் பல பொருளாதார நன்மைகள் தரும்.

வடமாகாண முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்படுத்தப்படும் வடமாகாண சுற்றுலா அபிவிருத்தி பற்றி பல்வேறு வேலைத்திட்டங்கள் முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்று வரும். இந்த வேளையில் அடுத்துவரும் அத்தியாயங்களில் 11 வலசைப் பறவைகளும், வடபகுதி சுற்றுலாத்துறை பற்றி விபரமாக நான் விளக்குவதன் ஊடாக முதலமைச்சர் உட்பட இதிலுள்ள அனைத்து செயற்பாட்டாளர்களும், தாங்கள் ஏற்கனவே பேச்சு பொருளாக உள்வாங்கியுள்ள சரித்திரம், தொல்பொருள், கலாச்சாரம், கடலோரம் சார் சுற்றுலாத்துறைகளுடன் பறவைகள் சார் சுற்றுலாத்துறையையும் மேம்படுத்துவதற்கான பல தகவல்களையும், தொடர்பாடலையும் மேற்கொள்ளலாம் என நான் நம்புகின்றேன்.

**(வலசைப் பறவைகள் அடுத்தவாரமும் பறக்கும்)**








# ஓடிக்கொண்டேயிருப்பதே வெற்றிக்கு மூலதனம்

## பொஸ்கோ பதிப்பக உரிமையாளர் சந்திரபோஸ்

‘வெற்றியின் இரகசியம் என்னவென்றால், நாம் என்ன செய்கிறோமோ அதில் முழு ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும். ஆரம்பத்திலேயே ஒருவர் பல தொழில்களில் ஈடுபட்டு, எதிலும் நாட்டமில்லாமல் இருந்தால் அவரால் எதிலும் நிலைக்க முடியாது’ என்கிறார் சந்திரபோஸ்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு எதிரில் உள்ள பொஸ்கோ பதிப்பகத்தின் உரிமையாளர் சி.சந்திரபோஸ். அப்பியாசக் கொப்பிகள், திருமண வாழ்த்து அட்டைகள் தயாரிப்பில் யாழ்ப்பாணத்தில் பெயர் சொல்லத்தக்க நிறுவனங்களில் ஒன்று பொஸ்கோ. யாழ்ப்பாணத்தில் திருமண அட்டை வடிவமைப்பு, அச்சிடலில் பல நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டிருந்தாலும், பாரம்பரியம், கலைநேர்த்தி, புதுமை போன்ற பல்வேறு அம்சங்களால் தனித்து ஜொலித்துக் கொண்டிருக்கிறது பொஸ்கோ.

வெற்றியின் படிக்கட்டுக்களிற்காக அவரை சந்தித்தபோது, தான் ஏறிவந்த படிக்கட்டுக்களை பற்றி எம்முடன் விரிவாக பேசினார்.

நடமாடும் அப்பியாசக் கொப்பி வியாபாரியாக இருந்து இன்று அப்பியாசக் கொப்பிகள் தயார் செய்யும், விற்பனை செய்யும்நிறுவனத்தின் உரிமையாளராகியதன் பின்னாலிருந்தது ‘வெற்றி’ என்ற விடாமுயற்சி வெறிதான். ‘பெரிய நிறுவனம் ஒன்றை நடத்திக் கொண்டு கடந்தகாலத்தை திரும்பிப்பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. பதின்னான்கு வயதில் குடும்பச்சுமையை ஏற்று உழைக்க ஆரம்பித்து, இப்படியான நிலையை அடைந்துள்ளேன். விடாமுயற்சி, முன்னேற வேண்டுமென்ற வெறிதான் இதன் பின்னாலிருந்தது’ என தனது கடந்தகாலத்தை அசைபோடுகிறார் சந்திரபோஸ்.

‘நான்கு சகோதரிகள், இரண்டு சகோதரர்களுடன் யாழ்ப்பாணத்தில் பிறந்தார் சந்திரபேஸ். குடும்ப நிலை சொல்லிக் கொள்ளும் விதத்தில் அமையவில்லை. சாதாரண குடும்பம்தான். சந்திரபேஸிற்கு பதின்னான்கு வயதானபோது திடீரென ஒருநாள் தந்தையும் இறந்துவிட்டார். குடும்பம் செய்வதறியாது நின்றது. தவிர்க்க முடியாமல் நானே குடும்பத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை. நான் ஏற்றேன். குடும்பம் சாப்பிட வேண்டுமேஞ் கையில் கிடைத்த எல்லா வேலையும் செய்தேன். முதலில் கிறசரில் கல்லுடைக்கும் தொழில் செய்தேன். ஒருநாள் சம்பளம் 60 ரூபா. பின்னர் பண்ணையொன்றில் முந்திரிகை நட கிடங்கு வெட்டினேன். ஒரு கிடங்கு வெட்டினால் 75 சதம். இருபத்தியிரண்டு வயதானதும் சொந்தமாக ஏதும் செய்யலாமென நினைத்தேன்.

முதலில் சைக்கிளில் கச்சான், இனிப்புக்களை கட்டிக் கொண்டு சென்று விற்றேன். முல்லைத்தீவு வரை சென்று வருவேன்’ என வாழ்வுடன் போராடத் தொடங்கிய ஆரம்பநாட்களை நினைவுகூர்ந்தார்.

‘அந்த தொழிலை விட அதிகம் லாபம் சம்பாதிக்கலாமென இன்னொரு தொழில் தொடங்கினேன். இதுதான் இன்று இப்படி வளர்ச்சியடைந்துள்ளது.

அப்பியாசக் கொப்பிகளை கட்டி விற்கத் தொடங்கினேன். கொப்பிகளை நானே கட்டி, வெட்டுமிடத்திற்கு கொண்டு சென்று வெட்டி, பின்னர் கடைகளிற்கு போட்டேன்.

இது படிப்படியாக வளர்ச்சியடைந்தது. எனது கொப்பியை வாங்க பலர் கடைகளில் முண்டியடிக்க, வாய்ப்பு பெருகியது.


இதன் அடுத்தகட்டமாக யாழ் நகரில் பொஸ்கோ புத்தகசாலையை நிறுவினேன். அங்கு அறுபதற்கு மேற்பட்டவர்கள் பணி புரிந்தார்கள். அந்தக்காலத்தில் பொஸ்கோ புத்தகக்கடையை தெரியாதவர்களே இருந்திருக்க மாட்டார்கள்.

பின்னர் அந்தக்கடையை மூடிவிட்டு, நல்லூர் ஆலய முன்றலில் பொஸ்கோ பதிப்பகத்தை திறந்தேன். இப்பொழுது 23 பேர் பணிபுரிகிறார்கள். திருமண மடல், கொப்பிகள், புத்தகங்கள் செய்து கொடுக்கிறேன். எமது கொப்பிகள்தான் தேவையென இன்றும் கடைகளில் பாடசாலை பிள்ளைகள் அடம்பிடிக்கும் சம்பவங்கள் நடக்கின்றன. நமது வெற்றிக்கு இப்படியான சம்பவங்கள்தான் உதாரணம்’ என்கிறார் தற்பெருமையின்றி.

வெற்றியின் படிக்கட்டுக்களில் ஏறிய சந்திரபோஸ் இளைஞர்களிற்கு சொல்லும் ஆலோசனை என்ன தெரியுமா?

‘எந்த வேலையென்றாலும் அதில் முழுவிருப்புடனும், ஈடுபாட்டுடனும் இயங்க வேண்டும். வெற்றியென்பது ஒரேயிடத்தில் உட்கார்ந்திருப்பவர்களிற்கு கிடைக்காது. ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும்’ என்கிறார்.


தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகரசபை பிரதேசத்தில் 1000 இடங்களில் டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. கல்லடி, நாவற்குடா பகுதிகளில் கடற்படை, பொலிசாரின் ஒத்துழைப்புடன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.












இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 14.02.2016 அன்று வெளியிடப்பட்டது